வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வாரமலர்

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 06 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 194 பக்கங்கள் : 16




# அதிகபட்ச சலுகையை பெற அமெரிக்காவுடன் பேச்சு!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 13

**அமெரிக்காவுடனான கலந்துரையாடலின் விளைவாக தீர்வை வரியை 44 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக குறைக்க முடிந்துள்ளதாகவும், பேச்சுவார்த்தைகளை தொடர்வதன் மூலம் மேலும் சலுகைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இதன்போது, இலங்கையின் பொருளாதாரம், வர்த்தகம், வர்த்தக சமூகம் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் சாதகமான திருத்தங்களை மேற்கொள்வதே அரசாங்கத்தின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம், மற்றும் இந்தத் தீர்வை வரிக் கொள்கை செயல்படுத்துவதுடன் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் தொடர்பில் ஏற்றுமதிக் கைத்தொழில் தொடர்பான அனைத்து தரப்பினருடனும் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது

15

# இலங்கைக்கு புதிய தூதரை நியமிக்கவுள்ள அமெரிக்கா



கொழும்பு, ஜூலை 13

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதராக எரக் மேயரை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பரிந்துரை செய்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இந்நிலையில், எரிக் மேயரின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பரிந்துரை செய்து அமெரிக்க செனட் சபைக்கு உறுதிப்படுத்தலுக்காக சமர்ப்பித்துள்ளார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த எரிக் மேயர், சிரேஷ்ட இராஜதந்திர சேவையில் கடமையாற்றும் ஒரு தொழில் சார் அதிகாரி ஆவார். தற்போது எரிக் மேயர், தெற்கா சிய மற்றும் மத்திய ஆசிய

15

# மலையக மக்கள் 10 பரம்பரையாக உழைத்தும் காணி உரிமை இல்லை!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 13

10 பரம்பரையாக இந்நாட்டுக்கு உழைத்தும் ஒரு துண்டு காணிகூட மலையக மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக இம் மண்ணில் வாழ்கின்றனர். நபரொருவர், பிரிட்டனுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றால் அங்கு 3 அல்லது ஐந்து வருடங்களில் குடியுரிமை

15

# சஜித் தரப்புக்குள் பிளவு?

கொழும்பு, ஜூலை 13

எதிர்க்கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் குழுவும், கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்து பேரும் நிர்வாகிகள் மற்றும் தலைவர்களை மாற்ற கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேரில் சந்தித்து, நிர்வாகிகள் மற்றும் தலைவர்களை உடனடியாக மாற்றவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து கட்சியுடன் இருந்த கட்சியின் நிர்வாகிகள் மற்றும்

15

# வாகனம் மோதி யாழில் பஸ் நடத்துநர் உயிரிழப்பு!

- த.பிதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 13

உணவருந்த வீட்டுக்கு சென்ற நபர் ஒருவர் வீதியில் வாகனம் மோதி உயிரிழந்தார். நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை சேர்ந்த கிறிஸ்தோத்திரம் பாலேஸ்வரன் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கோண்டாவில் டிப்போவில் பஸ் நடத் துநராக பணிபுரிந்து வருகின்றார்.

15

# பாலச்சந்திரன், இசைப்பிரியா மரணம் நிரூபிக்கப்படுமானால் போர்க் குற்றம்!

## சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே

கொழும்பு, ஜூலை 13

பாலச்சந்திரன், இசைப்பிரியா மரனங்கள் நிரூபிக்கப்பட்டால், சர்வ தேச சட்டத்தின் கீழ், அவை போர்க்குற்றங்களாகக் கருதப்படும் எனவும், ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் ரோம் சாசனம் ஆகிய இரண்டையும் மீறுவதாக உள்ளதாகவும் சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது, சர்வ தேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்துக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில், நீதிமன்றத்தை நாட முறைப்பாட்டாளரான அவர் தீர்மானித்துள்ளார்.

தமது முறைப்பாடு குறித்து, பொலிஸார் இது வரையில் உரிய பதில் வழங்காமையினால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடி, நீதிப் பேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக, முறைப்பாட்டாளரான சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்வரும்

15

# நெடுந்தீவு சென்று திரும்பிய படகு மூழ்கியது ஆபத்திலிருந்து தப்பிய சுற்றுலாப் பயணிகள்!

- த.பிதீபன் -



யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு சுற்றுலா சென்று திரும்பிய தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள், படகு கடலில் மூழ்கியபோதும், பாரிய ஆபத்தில் இருந்து உயிர்தப்பியுள்ளனர்.

நேற்று மதியம் நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமான சுற்றுப் பயணிகளை ஏற்றும் சிறியரக படகில் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவு சென்று திரும்பும்போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு மூழ்கியது.

இதனால் பயணிகள் 12 பேர் மற்றும் 2 பணியாளர்கள் என 14 பேர் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கு சென்று குழுவினர், குறிகாட்டுவான் திரும்பும்போது, இந்த அனர்த்தம்

15

# பாராளுமன்றில் 13 விவாதங்கள் நடத்தியும் குற்றவாளிகள் வெளிப்படுத்தப்படவில்லை!

கொழும்பு, ஜூலை 13

பாராளுமன்றத்தில் 13 விவாதங்கள் நடத்தியும் ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் வெளிப்படுத்தப் படவில்லை என்று கொழும்பில் இருந்து வெளிவரும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை 13 பாராளுமன்ற விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த 13 விவாதங்களும்

15

# அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் 36ஆவது நினைவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

அமரர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் 36ஆவது நினைவு தினம் இன்று ஞாயிற்றுக்கிழமையாகும்.

அமரர் அமிரின் உருவச்சிலைகள் அமைந்திருக்கும் வழக்கம்பரை வலிமேற்குப் பிரதேச சபையில் காலை 7.00 மணிக்கும், மூளாயில் உள்ள அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை வளாகத்தில் 8.00 மணிக்கும் மலரஞ்சலி நடைபெறும். (அ)

# நாட்டில் வறுமை அதிகரிப்பு

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 13

தற்காலத்தில் ஆதிக்கமிக்க முதலாளி வர்க்கம் உருவாகிவருவதாக சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசி ரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சமசமாஜ பத்திரிகையின் 89ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு


15

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகருக்குள் நுழைந்து காட்டு யானை பெரும் அட்டகாசம்

## உடைமைகள் சேதம், மக்கள் அச்சம்



வவுனியா, ஜுலை 13

வவுனியா நகர்ப்பகுதிக்குள் நேற்றையதினம் காட்டு யானை ஒன்று நுழைந்தமையால் பொது மக்கள் அச்சமடைந்தனர்.

நேற்று அதிகாலை தவசிக் குளம் - தோணிக்கல் வழியாக வவுனியா நகரை குறித்த யானை அடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதன்போது தோணிக்கல் பகுதியில் வீடொன்றை சேதப் படுத்தியதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் துவம்சம் செய் துள்ளது.

தோணிக்கல் வீதியால் வவு னியா நகரை அடைந்த குறித்த யானை தினச்சந்தைக்கு பின் பகுதியால் வவுனியா குளத்தில் இறங்கியது. இதன்போது சில கட்டடங்களின் மதில் சுவர்க ளையும் அது சேதப்படுத்தியுள் ளது.

வவுனியா குளத்தில் இறங் கிய யானை பல மணி நேரமாக வெளியே வரமுடியாமல் தத்த ளித்த வண்ணம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இது தொடர்பில் வனஜீவரா சிகள் திணைக்களத்துக்கு தெரி விக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த அதிகாரிகள் யானையை பாதுகாப்பாக அகற்றுவதற்கான நடவடிக்கை களை எடுத்துள்ளனர்.

குறித்த யானை வழிதவறி நகர்ப்பகுதிக்குள் வந்திருக்க லாம் எனவும் சந்தேகிக்கப்படு கின்றது.

(எ-10)

# விபுலானந்தா கல்லூரியில் 10 மாணவர்கள் 9ஏ சித்தி

வவுனியா, ஜுலை 13

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் 10 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள் ளன. இதில், விபுலானந்தா கல்லூரியில் பரீட்சைக்கு தோற் றிய மாணவர்களில் காண்டீபன் கிருஸ்சிகேசன், ஸ்கந்தராசர்மா கஜானன், குணதரசர்மா சருஜ சர்மா, இராமகிருஸ்ணன் வோகித், சிவராசா தட்சாயினி, கந்தராசா டிஜானா, திலகநாதன் ஹரிணி, உதயதாசன் யதுசன், நிலாந்திரன் துபதாசன், யோகேஸ்வரன் ரஜீவ் ஆகிய 10 மாணவர்களும் 9 ஏ சித்திக ளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன், 02 மாணவர்கள் 8ஏ, பி சித்திகளையும், 04 மாண வர்கள் 7ஏ 2 பி சித்திகளையும், 01 மாணவர் 7ஏ,பி,சி சித்தியை யும், 01 மாணவர் 7ஏ பி, எஸ் சித்தியையும், 01 மாணவர் 7ஏ 2சி சித்தியையும் பெற்றுள் ளனர். (எ-10)

# உடுத்துறை வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் 9 ஏ சித்தி


யாழ்ப்பாணம், ஜுலை 13

வடமராட்சி கிழக்கு உடுத் துறை மகா வித்தியாலயம் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படை யில் சாதனை படைத்துள்ளது. குறித்த கல்லூரியில் கல்வி கற் கும் நான்கு மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வை.ரம்சிகா, எஸ். கவிநிலா, யு. கவியரசி மற்றும் ரி. குபேசன் ஆகிய நான்கு மாணவர்களே 9ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

இதேவேளை வி. இசை வானி மற்றும் ஏ. சங்கவி ஆகிய மாணவர்கள் 8ஏ பி சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த் துள்ளனர். (எ-05)

# புலிக்குளம் சர்ச்சைக்கு தீர்வுகாண ஆளுநர் தலைமையில் ஆராய்வு



கிளிநொச்சி, ஜுலை 13

புலிக்குளம் தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு காணும் நோக் கில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரை யாடல் ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலா ளர்கள், நீர்ப்பாசனத் திணைக் களப் பொறியியலாளர்கள், கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் கிளி நொச்சி வளாகத்தினர் ஆகி யோர் இந்தக் கலந்துரையாட லில் பங்கேற்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் துணுக்காய் பிரதேச செய லாளர் பிரிவில் உள்ள புலிக் குளம் கடந்த காலங்களில் தவ றான தகவல்கள் வழங்கப்பட் டதன் அடிப்படையில் கிளி நொச்சி மாவட்டத்துக்கு மாற் றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித் தார்.

கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் வளாகத்துக்கு குடி நீர் வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எதிர்ப்பில்லை எனவும் முல்லைத்தீவு மாவட் டத்தின் முறிகண்டியைச் சேர்ந்த மக்களுக்குரிய வாழ் வாதாரத்துக்கு நீர் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

புலிக்குளத்தின் கொள்ளவு மற்றும் அதன் புனர்நிர்மாணம் தொடர்பில் கடந்த காலங்க ளில் மத்திய அரசின் நீர்ப்பா சனத் திணைக்களத்தால் ஆய்வு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில், புலிக் குளத்தை எதிர்காலத்தில் மாகாண நீர்ப்பாசனத் திணைக் களத்தின் பொறுப்புக்குள் உள்வாங்குவதென்றும் பல்க லைக்கழத்துக்கான நீர்த் தேவைக்கு முன்னுரிமை வழங்குவதெனவும் தீர்மா னிக்கப்பட்டது. இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் நீர் வழங்குவதெனவும் அதனை அடிப்படையாகக் கொண்டும் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்ட ஆய்வு அறிக்கையை வைத்துக்கொண்டும் மேலதிக ஆய்வுகள் மேற்கொண்டு ஒரு மாத காலத்தினுள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையில் குழுவொன்று ஆளு நரால் நியமிக்கப்பட்டது. (எ)

# வவுனியாவில் சிறுபோக அறுவடை ஆரம்பமானது



வவுனியா, ஜுலை 13

வவுனியாவில் சிறுபோக அறுவடை முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தை பொறுத்த வரை பருவகால மழை, கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக அனைத்து குளங்களும் அவற் றின் நீர் கொள்ளவை எட்டிய நிலையில் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக அளவை விட இம்முறை 5000 ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோக நெற் செய்கை மேற் கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் இம் முறை 21 ஆயிரம் ஏக்கரில் சிறு போக நெற் செய்கை முன்னெ டுக்கப்பட்ட நிலையில் தற் போது வரை 30 சதவீதமான நெல் அறுவடை முடிவடைந் துள்ளது.

இதேவேளை அரசாங்கத் தால் நெல் கொள்வனவுக்கான நிர்ணய விலை அறிவிக்கப் பட்டு நாடளாவிய ரீதியில் கொள்வனவு முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. (எ-10)

# சைவப்பிரகாசா கல்லூரியில் பத்து மாணவிகள் 9 ஏ சித்தி

வவுனியா, ஜுலை 13

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூ ரியில் பத்து மாணவிகள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

பிரசாந்தன் ஹரணி, சிவ ரூபன் மகிழிசை, சிவனேஸ்வரன் சிபிக்கா, அஜந்தன் வர்ணிகா, அஜித்குமார் ஹரணியா, சுவேந் திரன் தன்சிகா, தவசீலன் கபிஸா, தவபாலன் அர்ச்சனா, வோல் டர் விதுசாலினி, துதர் சன் பேரேழில் ஆகிய மாணவி களே 9 ஏ சித்திகளைப் பெற் றுள்ளனர்.

(எ-10)

# வடமாகாணத்திலிருந்து வெளியேற 70 ஆசிரியர்கள் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 13

வடக்கு மாகாணத்திலிருந்து வவுனியா தெற்கு வலயத்தில் கற்பிக்கும் 70 ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு செல்ல விண்ணப்பித்துள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கி. வசந்த ரூபன் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருவதற்கான இடமாற்றம் சம் மந்தமான கூட்டங்கள் நடை பெற்று வருகின்றன. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் வவு னியா தெற்கு வலயத்தில் இருந்து 12 சிங்கள மொழி ஆசிரியர்களும், 18 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் மாகாணத்தை விட்டு வேறு மாகாணங்களுக்கு செல்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த விண்ணப்பங்கள் மாகாண இட மாற்ற சபை ஊடாக விரைவில் பரிசீலிக்கப்படவுள்ளது.

அத்துடன், வடக்கு மாகா ணத்தின் வலயங்களுக்கு இடையில் இடமாற்றம் பெறு வதற்கு வவுனியா தெற்கு வல யத்தில் இருந்து 22 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், ஒரு சிங்கள மொழி மூல ஆசிரி யருமாக 23 பேர் விண்ணப்பித் துள்ளனர். அதனை வவுனியா தெற்கு வலய இடமாற்ற சபை பரிசீலனைக்கு எடுத்துக் தீர் மானங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இந்தத் தீர்மா னங்கள் வடக்கு மாகாண கல் விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இறுதி முடிவு கள் வலய இடமாற்ற சபை தீர்மானத்தையும் கருத்தில் கொண்டு மாகாண இடமாற்ற சபையால் மேற்கொள்ளப்பட்டு சமமந்தப்பட்ட ஆசிரியர்க ளுக்கு அது தொடர்பான தக வல்கள் அறிவிக்கப்படவுள்ளன. வலயத்துக்கு உட்பட்ட இட மாற்ற சபை விரைவில் கூட்டப் படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மக்கள் பாதிக்கப்படுவதற்கு இனியும் இடமளிக்கக்கூடாது

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

மாத்தறை, ஜூலை 13

அரசியல்வாதிகள், அதிகாரிகளின் தவறான முடிவுகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்கு இனியும் இடமளிக்கக் கூடாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் ஓர் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட அதிகபட்ச மூலதனச் செலவினம், இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதை நினைவுகூர்ந்து, இந்த வருட இறுதிக்குள் அந்த நிதி ஒதுக்கீட்டை உரிய முறையில் செலவிடுவதற்கும், அதன் மூலம் இந்த நிதி ஆண்டில் எதிர்பார்த்த பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பது, அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதியும் கூறினார்.

மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது, 2025 வரவு - செலவுத் திட்டத்தில் நிறுவன மட்டத்தில் மாத்தறை மாவட்டத்தில் ஒவ்வொரு திட்டத்துக்கும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு, இதுவரை தொடங்கப்பட்ட மற்றும் இந்த ஆண்டு தொடங்க திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் தற்போதைய பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டன. அங்கு, விவசாயம், சுகாதாரம், கல்வி, கிராமிய அபிவிருத்தி, காணி மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் எழுந்துள்ள பிரச்னைகள் மற்றும் அவற்றுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நில்வலா ஆற்றின் உப்புத் தடுப்பு நிர்மாணிப்பு குறித்த பிரச்னைக்கு சம்பந்தப்பட்ட துறைகளில் வல்லுநர்கள் அடங்கிய நிபுணர் குழுவை நியமிப்பதற்கும், அந்த குழுவின் அறிக்கையை ஒரு மாதத்துக்குள் பெற்றுக்கொள்வதற்கும் இங்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததுடன், மாத்தறை மாவட்டத்தில் ஏற்படும் வெள்ள நிலைமையை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு அறிவியல் ரீதியிலான திட்டத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தற்போது பயன்படுத்தப்படாத மற்றும் முழுமைபெறாத அரச கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்களை செயல்திறன் மற்றும் உரிய பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியதோடு, அதற்கான மாற்று முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், பொல்ஹேன உத்தேச கிரிக்கெட் பயிற்சிப் பாடசாலையை நிர்மாணிப்பது தொடர்பான பரிந்துரையை தயாரித்து முன்வைக்குமாறும், அதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் எடுக்கும் முடிவுகளால், இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் அதற்கு எந்த சம்பந்தமும் இல்லாத பொதுமக்கள்தான் என்றும், இனிமேலும் இது நடக்க இடமளிக்கக்கூடாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(எ)



# உரிமைகளை வலியுறுத்தி கையெழுத்து போராட்டம்

வவுனியா, ஜூலை 13

அனைத்து தேசிய இனங்களுக்கும் உரிமைகளை உறுதி செய்யுமாறு கோரி சமஉரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் நேற்றுக் காலை இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவோம் போன்ற கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

(எ-10)

# யாழில் மணல் கடத்தல்: தப்பிச்செல்ல முயன்ற டிப்பரை மடக்கிப் பிடித்த பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 13

மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனமொன்றை பருத்தித்துறை பொலிஸார் அதிரடியாக மடக்கிப் பிடித்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், வல்லிபுரம் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை மந்திகை சந்தி அருகே பொலிஸார் வழிமறித்தபோது நிற்காமல் தொடர்ந்து சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து டிப்பரை துரத்திச் சென்ற பொலிஸார், வாகனத்தின் ரயரின் மீது ஆணிக்கட்டைகளை வீசியுள்ளனர். இதனால் ரயரின் காற்று வெளியேறியதால் வாகனத்தை இயக்க முடியாமல் போயுள்ளது.

பின்னர், வாகனத்தை வீதியில் கைவிட்டுவிட்டு தப்பியோட முயன்ற சாரதியை, பொலிஸார் விரைந்துசென்று மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், டிப்பர் வாகனத்துடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-02)

# ரயிலில் மோதி ஒருவர் பலி!

கிளிநொச்சி, ஜூலை 13

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவு தபால் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி தொண்டமாநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

தொண்டமாநகர் பகுதியைச் சேர்ந்த கறுப்பையா ஐங்கரன் என்ற 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மது போதையில் இருந்ததன் காரணமாக அவர் ரயிலுடன் மோதி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# அச்சுறுத்தலான விடயங்களை கூறினால் சி. ஐ. டியில் முன்னிலையாக வேண்டும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூலை 13

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களை பாராளுமன்ற சிறப்புரிமையிலிருந்து கொண்டு குறிப்பிட்டாலும், விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும். அச்சமடைய வேண்டாம். குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வாக்குமூலமளியுங்கள். சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு ஏதனையும் கூற முடியுமா? என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது அமைச்சர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் குறித்த கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்ததாக கூறினார்கள். அரசாங்கம் என்ற வகையில் இதனைப் பாரதூரமான பிரச்னையாக பார்க்கின்றோம். அவ்வாறு ஆயுதங்கள் இருந்தால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதே.

இவ்வாறு பாராளுமன்றத்தின் உள்ளே கூறினாலும், வெளியில் கூறினாலும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக அந்தத் தகவல்களை பொலிஸாருக்கும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கும் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு பாரதூரமான விடயங்களை குறிப்பிட்டு விட்டு, அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் போது அச்சமடைய வேண்டாம்.

பாராளுமன்ற சிறப்புரிமை என்று கூறிக்கொண்டு அதற்குள் இருக்க வேண்டாம். தேசிய பாதுகாப்பானது என்று முக்கியமான தகவலை வெளியிட்ட பின்னர் அவர்களை அழைத்து அந்தத் தகவல்களை பெற்றுக் கொள்வதையே குற்றப்புலனாய்வு மேற்கொள்கிறது. இந்த விடயத்தில் பயப்பட வேண்டாம். தகவல்களை வழங்குங்கள் - என்றார்.

(எ)

# பாராளுமன்றில் இனி பொய்கூற வேண்டாம்

## எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு அமைச்சர் சமரசிங்க அட்வைஸ்

கொழும்பு, ஜூலை 13

பாராளுமன்றத்தில் உண்மைகளையே கூற வேண்டும் என்று எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு அமைச்சர் வசந்த சமரசிங்க அறிவுறுத்தினார்.

எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துகொண்டு சபையில் வேண்டியளவுக்கு பொய்களை கூறுகின்றனர். அவை ஊடகங்களில் வெளியாகின்றன. பொய் கூறவில்லையென்றால் அச்சமின்றி சென்று குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வாக்குமூலமளியுங்கள் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரபாகரனின் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாக கூறியவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கும் போது அங்கு செல்ல பயப்படுகின்றனர். எதற்கு அவர்கள் பயப்பட வேண்டும். சாட்சியளிக்க முடியும். இது பொய்கூறும் இடமல்ல. உண்மைகளையே கூற வேண்டும்- என்றார்.

(எ)

# "தீர்வை வரியை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"

கொழும்பு, ஜூலை 13

அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைந்தமை நல்ல விடயம். என்றாலும், எங்களுடன் ஏற்றுமதி போட்டியாளர்களாக இருந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் பெற்ற வரிச்சலுகை நியாயமானது தானாவெனக் கேட்கிறோம். அத்துடன் வெள்ளைமாளிகையுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு இதனை இன்னும் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டு ஏற்றுமதிகளில் 26. 4 சதவீத பங்களிப்பைப் பெற்றுத் தரும் ஏற்றுமதி தலமாக அமெரிக்கா திகழ்ந்து வருகிறது. ஆடைத்துறையில் 60 வீதம் ஏற்றுமதி தலமாகவும் அமெரிக்கா நாடே இருந்து வருகிறது.

தீர்வை வரியை 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைந்தமை நல்லதொரு விடயம். என்றாலும், எங்களுடன் ஏற்றுமதி போட்டியாளர்களாக இருந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது நாம் பெற்ற வரிச் சலுகை நியாயமானது தானா என்பது குறித்தும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஜப்பான் 25சதவீதம், மால்டோவா 25சதவீதம், புரூணை 25சதவீதம், தென் கொரியா மற்றும் கஸகஸ்தான் 25சதவீதம், இந்தியா 26சதவீதம் என்ற வகையில் இந்த நாடுகள் தமது தீர்வை வரிகளைக் குறைத்துக் கொண்டுள்ளன. நாம் இந்தியா பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் - என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பொலிஸாருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்

வவுனியா, ஜூலை 13

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு போக்குவரத்து பொலிஸார் துரத்திச்சென்றமையால் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியான தாகவும் இதனால் அப்பகுதி மக்கள் பொலிஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டமையால் அந்தப்பகுதியில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கூமாங்குளம் மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ள வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் வந்துள்ளனர்.

இதன்போது அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த நபர் ஒருவரை துரத்திச்சென்றதுடன் அவரது வாகன சக்கரத்தில் (சில்லில்) தடி ஒன்றால் தடையை ஏற்படுத்தியதாக மக்கள் தெரிவித்தனர். இதனால் நிலை தடுமாறி கீழே வீழ்ந்த குறித்த நபர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அவதானித்த இளைஞர்கள் மற்றும் ஊர்மக்கள் ஆத்திரமடைந்து பொலிஸாரின் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் ஒரு வாகனத்தையும் சேதப்படுத்தினர். அடாவடியான இந்தச் செயல்பாட்டுக்கு நீதி கிடைக்கவேண்டும் என தெரிவித்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நீண்டநேரமாக சிறைபிடித்து வைத்தனர். இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலத்தை அகற்றுவதற்கு மறுப்பு தெரிவித்த இளைஞர்கள் நீதிபதி இங்கு வரவேண்டும் வந்த பின்னரே சடலத்தை அகற்ற அனுமதிப்போம் எனவும் தெரிவித்தனர்.

இதனால் பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இளைஞர்களின் செயல்பாட்டினால் தடுமாறிய பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் திணறினர்.

இந்த நிலையில் வவுனியா சிரேஷ்ர பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததுடன், இந்த மரணத்தை கொலை வழக்காக பதிவு செய்து அதனுடன் தொடர்புடையை சந்தேகநபர்களை விசாரிப்பதாக தெரிவித்ததுடன், சடலத்தை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்கள் பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. நீதிபதி இங்கு வரவேண்டும் என விடாப்பிடியாக நின்றனர் . இதனால் குறித்த பகுதியில் கலவரம் ஒன்று ஏற்படுவதற்கான நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகைதந்து மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தார். இதனையடுத்து பொதுமக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சடலம் அந்தப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டு பொலிஸாரின் வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட பொதுமக்கள் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்தவர் கூமாங்குளம் பகுதியை சேர்ந்த இராமசாமி அந்தோணிப்பிள்ளை வயது 58 என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது சடலத்துக்கு அருகில் பொலிஸார் ஒருவரின் பெயர் பொறிக்கப்பட்ட இலட்சனை ஒன்றும் காணப்பட்டது.

குறித்த சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் விசேட அதிரடிப்படையினர், கலகம் தடுப்பு பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.(எ-10)

# கிராமிய வங்கியில் ரூ. 92 கோடி மாயம்

## பணிப்பாளர் சபை மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

அவிசாவளை தொகுதியில் கிராமிய வங்கி பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள் காரணமாக அங்கிருந்த 24 கிராமிய வங்கிகளையும் மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இலட்சக்கணக்கான வைப்பாளர்களின் 92 கோடி ரூபாய் வைப்பு பணம் காணாமல் போயுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராய்ச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேல் மாகாண கூட்டுறவு சங்கத்தின் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், பணிப்பாளர் சபை ஒன்று தனக்கு கீழ் இருக்கும் கிராமிய வங்கி வைப்பு பணத்தை, வைப்பு செய்வதாக இருந்தால் கட்டாயமாக அரச வங்கி ஒன்றிலேயே வைப்பு செய்ய வேண்டும். ஆனால் அவிசாவளை தொகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் கிராமிய வங்கியில் வைப்பு செய்த பணத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இன்றும் பாரிய கஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏனெனில் அரசியல் கட்சிகளில் இருந்த பிரதிநிதிகள் அந்த பணிப்பாளர் சபை அதிகாரிகள், அரசியல்வாதிகளின் பாதுகாப்புடன் அந்த கிராமிய வங்கி வைப்பாளர்களின் பணத்தை கொள்ளையடித்துள்ளனர். தற்போது அந்த கிராமிய வங்கி கட்டமைப்பு முற்றாக இல்லாமலாக்கப்பட்டுள்ளது. 92 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்க சட்டத்தை மீறி, அரசியல்வாதிகளின் பலத்துடன், அதன் பணிப்பாளர் சபை, வங்கி வைப்பு பணத்தை வேறு தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் பணத்தை செலுத்தி இருக்கிறது. இதன்மூலம் அவர்கள் பல்வேறு வரப்பிரசாதங்களை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

எனவே இது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (எ)

# நீர்நிலையிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

மாத்தறை, ஜூலை 13

மாத்தறை பறவைகள் சரணாலயத்துக்கு செல்லும் பாலத்துக்கு அடியில் உள்ள நீர்நிலையிலிருந்து வெள்ளிக்கிழமை இரவு பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் கூறினர்.

40 முதல் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போதைப்பொருள் விற்றவர் 2 வாள்களுடன் கைதானார்

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அங்கொடை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாள்களுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 12 கிராம் 570 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 2 வாள்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்ததாக கூறப்படும் 72, 500 ரூபாய் பணம் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு 28ஆம் திகதி விசாரணை

கொழும்பு, ஜூலை 13

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேர்வின் சில்வா, 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில் கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றில் முன்னிலையானார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் நீதிபதி விடுமுறையில் உள்ளதால் இந்த வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 05ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 03 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மனிதப் புதைகுழி வழக்கில்

# சட்டமா அதிபரை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

கல்முனை, ஜூலை 13

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கில் சட்டமா அதிபரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990. 07. 12 ஆம் திகதி புனித ஹஜ் கடமையை நிறைவு செய்து வீடு திரும்பிய யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை - மட்டக்களப்பு வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்திக் காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட அப்துல் மஜீத் அப்துல் றவூப் என்பவரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிவான் குறித்த சந்தேகத்துக்கிடமான மனிதப்புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாக சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு நீதிமன்றுக்கு அறிக்கையிடுமாறு உரிய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கட்டளையிட்டார்.

நில அளவைத் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், தொல்லியல் திணைக்களம், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தடயவியல் மருத்துவம் மற்றும் நஞ்சியல் நிறுவகம் என்பன தமது ஆய்வுகளை மேற்கொண்டு குறித்த சந்தேகத்துக்கிடமான மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முடிவுறுத்தி மன்றுக்கு திட்ட வரைவையும் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த நிலையில், மன்றுக்கு சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அதனை நீதிமன்றுக்கு அறிவிப்பதற்குத் தவணையொன்றை வழங்குமாறு மன்றுக்குத் தெரிவித்திருந்தனர். இதன் பிரகாரம், 04.10.2020 இல் சட்டமா அதிபரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கானது கிடப்பிலிடப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியிலேயே வழக்கின் முறைப்பாட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நேற்று முன்தினம் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணியால் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கானது திறந்த மன்றில் அழைக்கப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணம் மற்றும் வழக்கேட்டை மிக நுணுக்கமாக ஆராய்ந்த நீதிமன்றமானது முறைப்பாட்டாளரின் முறைப்பாடானது நீதிமுறையாக அணுகப்படாமல் நிலுவையாக உள்ளமையானது நீதியின்பாற்பட்டதல்ல எனும் அடிப்படையில் குறித்த வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி தவணையிடுவதாகவும் குறித்த தினத்தில் மன்றில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கும் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கும் அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை ஆக்கியுள்ளார். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை ஈழநாடு

குரோதி வருடம், ஆனி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## நீதி கோரும் ஹக்கீம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு காரணங்களை தேடிக் கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ், செம்மணி விவகாரத்தை ஒரு வாய்ப்பாக கருதிக் கொள்வதாகத் தெரிகின்றது. செம்மணி புதைகுழி விவகாரம் அரசியல் பரப்பில் செல்வாக்குச் செலுத்திவருவதை பயன்படுத்திக் கொண்டு, முஸ்லிம் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட விவகாரத்தை விசாரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஹக்கீம் முன்வைக்கின்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை கோரும் உரிமை அனைத்து தரப்பினருக்கும் உண்டு. ஆனால் இதிலுள்ள நகைச்சுவை என்னவென்றால் இன்று முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும், அவர்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் என்றும் வாதிடுகின்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவரோ, இந்த நாட்டில் நீதி அமைச்சராக இருந்தவர். அவர் நீதி அமைச்சராக இருக்கின்ற போது நீதியை காப்பாற்றுவதில் காண்பிக்காத கரிசனையை இப்போது காண்பிப்பதை நகைச்சுவை என்று கூறாமல் வேறு எப்படிக் கூற முடியும். நீதி அமைச்சராக இருக்கின்ற போது ஹக்கீம் ஏன் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்கவில்லை?

முஸ்லிம் அரசியல்வாதிகள் எப்போதும் ஆளும் தரப்போடு இணைந்து பதவிகளை பெற்றுக் கொள்ளும் அரசியலை பிரதான உபாயமாகக் கொண்டிருப்பவர்கள். அவர்களின் முதன்மையான அரசியல் உபாயம் அதுதான். ஆனால் அண்மைக் காலத்தில் அதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதைத் தொடர்ந்து, இணக்க அரசியல் செய்யும் முஸ்லிம் கட்சிகள் தனித்து விடப்பட்டன. பதவிகளை பெற முடியாதவர்களாக முஸ்லிம் அரசியவாதிகள் பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் இந்த நிலைமை தொடர்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கோட்டாபய போன்று முஸ்லிம் அரசியல்வாதிகளை தனிமைப்படுத்தும் நிகழ்ச்சிநிரலைக் கொண்டிருக்காவிட்டாலும் கூட, முஸ்லிம் அரசியல் கட்சிகளை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு தேசிய மக்கள் சக்திக்கு இல்லை.

பதவிகள் இல்லாது அரசியல் செய்யத் தெரியாத முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வீழ்ந்து போக வேண்டும் என்றே கருதுவதற்கு அதிக வாய்ப்புண்டு. இவ்வாறானதொரு பின்னணியில்தான் செம்மணிக்கு நிகரான புதைகுழிகள் கிழக்கு மாகாணத்திலும் உண்டு, அது தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஹக்கீம் வாதிடுகின்றார்.

பொதுவாக தமிழ் மக்கள் தங்களுக்கான நியாயங்கள் தொடர்பில் குரல் எழுப்புகின்ற போது மட்டும்தான் முஸ்லிம்களுக்கான உரிமை தொடர்பில் ஹக்கீம் போன்றவர்கள் சத்தம் போடுவதுண்டு. இதனை ஒரு தந்திரமாகவே அவர்கள் பின்பற்றிவருகின்றனர். இறுதியில் இவ்வாறான முஸ்லிம்களின் நீதிக்கான குரல்களோ, தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்துவதற்கே பயன்படுவதுண்டு.

## இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவன மோசடியில் நல்லாட்சி அரசுக்கு தொடர்பு?

கொழும்பு, ஜூலை 13

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பான முறைகேடுகள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணையத்திடம் முறைப்பாடு அளிக்குமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய நாடாளுமன்றக் குழு அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் , இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பதிவாகியுள்ள நிதி மோசடிக்கு நல்லாட்சி அரசாங்கமும் அதன் முழு அமைச்சரவையும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார்.

மகாபொல புலமைப் பரிசில் நிதியிலிருந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை நீக்கி, அதை ஒரு



வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றியதன் காரணமாக, நல்லாட்சி அரசாங்கத்தில் நிதி முறைகேடுகள் நடந்ததாக அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த விடயத்தை ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அடங்கிய அப்போதைய அரசாங்கமும் அமைச்சரவையும் விதிமுறைகளை மீறி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டத்தை கண்டறிந்துள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க சிஐடி மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்திடம் முறைப்பாடு அளிக்கப்படும்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை மீண்டும் மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 13

மொரட்டுவையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறி ஒன்று அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் , கல்கிஸை பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் கல்கிஸை ஸ்ரீதர்மானந்த மாவத்தையைச் சேர்ந்த 75 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், ஜூலை 13


தலைமன்னார் கடற்பரப்பில் கைதான இராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த முதலாம் திகதி குறித்த 07 மீனவர்களும் கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த நிலையில் வழக்கு மன்னார் மாவட்ட நீதவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் போதே எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை

இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் 23 படகுகளுடன் 174 தமிழக மீனவர்கள் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசகம் முற்றோதல்



வடமராட்சி, ஜூலை 12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், பூரணை தினமான நேற்று வியாழக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் காலை 5.30 மணி தொடக்கம் பக்தி பூர்வமாக திருவாசகம் முற்றோதல் இடம்பெற்றது. (அ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து வாழும் தனித்துவ பெண்கள்!

சி.சண்முகவேல்

பட்டங்களை ஆள்வதிலும், சட்டங்கள் செய்வதிலும் பெண்கள் இன்று ஆண்களுக்கு நிகராக மட்டுமல்ல, அவர்களை விஞ்சி நிற்கும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. என்றாலும், கணவரை இழந்த, குடும்ப ஆதரவு இல்லாத பெண்களின் நிலை அதே அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதா என்றால், சற்றே யோசிக்கும் நிலைதான் உள்ளது.

கைம்பெண்களின் உரிமைகள், தேவைகள் குறித்து விழிப்புணா'வு ஏற்படுத்தவும், அவர்கள் சமூகத்தில் சமமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலும், ஐ.நா. சபை அறிவித்த உலக கைம்பெண் நாள் (ஜூன் 23) அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.



உலகம் முழுவதும் 25.8 கோடி கைம்பெண்களும், 50 கோடிக்கும் அதிகமான அவர்களது குழந்தைகளும் உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் குடும்பத்தினரால் ஒதுக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை உலக அளவில் 11.5 கோடியாக உள்ளது.

கைம்பெண்களில் பலர், அவர்களது குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகின்றனர். உலகில் 15 லட்சம் விதவைகளின் குழந்தைகள் 5 வயதுக்கு முன்பே இறந்துவிடுகின்றனர்.

விபத்து, மதுவால் ஏற்படும் நோய், போதைப் பொருள்கள் பயன்பாடு, ஹெச்.ஐ.வி., நாள்பட்ட நோய்கள், ஆயுத மோதல்கள், ஜாதிய வன்முறைகள், போர்கள், பல்வேறு சமூக சிக்கல்கள், தற்கொலை, வறுமை மற்றும் வருவாய்ப் பற்றாக்குறை போன்றவை கைம்பெண்கள் உருவாக வழிவகுக்கின்றன.

இந்தப் பெண்கள் எளிதாக கொலை, பலாத்காரம், பாலியல் தொழில், கட்டாயத் திருமணம், சொத்து திருட்டு, வெளியேற்றம், சமுதாயத் தனிமை, சமுதாய விலக்கம், சமுதாயப் புறக்கணிப்பு, பாலினப் பாகுபாடு போன்ற கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர்.

மேலும், வறுமை, வருவாய் இழப்பு, குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி இழப்பு, கட்டாய உழைப்பு, மனிதக் கடத்தல், வீடற்ற தன்மை மற்றும் பாலியல் வன்முறை போன்ற கொடூரங்களையும் இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

கைம்பெண்கள் குறித்த முழுமையான புள்ளிவிவரங்கள் இல்லாதது, அரசுகளால் கணக்கெடுக்கப்படாதது போன்ற மிக நுட்பமான பிரச்னைகளால், இவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் சமுதாயத்தின் பார்வைக்கு வராமலேயே போய்விடுகிறது.

செயற்கை நுண்ணறிவு யுகம் என்று அழைக்கப்படும் இந்த நவீன சூழலிலும் கைம்பெண்களின் வாழ்வியல் நிலையில் பெரிய அளவிலான மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கணவர் இறப்புக்குப் பிறகு சொத்து உள்ளிட்டவற்றில் சட்டபூர்வ உரிமை, பங்கேற்பு உரிமை, இவர்களுக்கு மற்றும் இவர்களது குழந்தைகளுக்கான கல்வி, உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமை, வேலைவாய்ப்பு, சுயதொழில், பாதுகாப்பு மற்றும் அரசு நலத்திட்டங்கள் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் கிடைப்பதில் இவர்களுக்கு உள்ள சவால்கள் களையப்பட வேண்டும்.

கணவரின் மரணத்துக்குப் பிறகு இந்தப் பெண்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் தரமான, கண்ணியமான வாழ்க்கையை உறுதிசெய்ய கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்துக்கான சேமிப்புத் திட்டங்கள் போன்றவற்றில் அரசுகள் கூடுதல் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

கைம்பெண்கள் அனைத்து நிலைகளிலும் மாண்புடன் வாழ அவர்களுக்கு சமுதாயம் முழு ஆதரவளிக்க வேண்டும். கைம்பெண்களின் மீதான சடங்கு, சம்பிரதாயங்கள், மரபுவழி மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழித்து சமத்துவம், மனிதநேயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வேலை, தொழில் மற்றும் பொது இடங்களில் பாலின சமத்துவம் மற்றும் பணியிடப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

அடிப்படை உரிமைகள் பாரபட்சம் இல்லாமல் கிடைப்பது உறுதிசெய்யப்பட வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதில் அரசே முதன்மை கடமைதாரர். இதன் மூலம், சமுதாய பாதுகாப்பு மற்றும் வறுமையில் வாடும் கைம்பெண்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

அதேபோல, கைம்பெண்கள் போன்றே பல்வேறு வகைப் பிரிவின் கீழ் தனித்து வாழும் பெண்கள் அடையாளம் காணப்படுவது ஆண்டுதோறும் அதிகரித்து வருவது கவலையடையச் செய்கிறது. பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமூக விழுமியங்கள், தொழில்நுட்பம் எனக் காலங்கள் மாறிக்கொண்டே இருந்தாலும், பாலினப் பாகுபாட்டால் பெண்கள் பொருளாதாரத்தில் ஆண்களைச் சார்ந்திருக்கவேண்டிய சமுதாயக் கட்டமைப்பு இன்றளவும் உள்ளது.

பெண்கள் மீதான ஆணாதிக்க சங்கிலித் தொடரை உடைக்க வேண்டுமெனில் பெண்கள் உயர் கல்வி, பொருளாதார தற்சார்பு, அதிகாரத்தைப் கைப்பற்றுதல் மற்றும் தலைமை ஏற்பதாலேயே அது முடியும். பொருளாதாரத்தில் கைம்பெண்கள் வலிமையாக இல்லை என்றாலும், அவர்கள் மன ரீதியாக வலிமையானவர்களாகவே இருக்கிறார்கள்.

விதவைகள் மத்தியில் தற்கொலை எண்ணம் குறைவு. இது அவர்களது மனஉறுதிக்கு அடையாளம். தனித்து வாழும் பெண்கள் தனித்துவமான பெண்கள். அவர்கள் சாதிக்க ஒட்டுமொத்த சமுதாயமும் அவர்களோடு ஒன்றிணைவோம்.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 13.07.2025 - 19.07.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 29
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் அரசு பதவியில் உள்ளவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, தங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் விருந்தினர் வருகையால் வீட்டில் சந்தோஷம் பெருகும். சினிமா, பொழுது போக்குதல் எனச் செலவுகளுக்கும் குறைவிருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளுக்குச் செலுத்த வேண்டிய கல்லூரிக் கட்டணங்களுக்கான வங்கி உதவிகளுக்கு முயற்சித்தால் தேவையான கடன் உதவிகள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் இறை தரிசனத்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் அடைவீர்கள். உங்களுக்குப் பணம் சம்பாதிப்பதில் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊக்கம் ஏற்படும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலமான நடவடிக்கைகளால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்க தாமதம் ஏற்படும். சிலருக்கு பூமி, வீடு என அசையாச் சொத்துக்கள் சேரும். காவல்துறை மற்றும் இராணுவப் பணியாளர்கள் பல சாகசங்களை நிகழ்த்துவர்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்கு நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். பண விஷயங்களில் யாரையும் நம்பி ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தீவிர முயற்சிக்குப் பின், இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கெடுபிடி செய்வார்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் பல ஏற்படும். நல்ல குரு வாய்க்கப் பெற்று அனைத்து வழிகளிலும் அறிவுத் தெளிவு ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சி கள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். அதன் காரணமாக சுபச்செலவுகள் கூடி, அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச இந்த வாரம் சுபகாரியங்களுக்கான நிகழ்ச்சியால் இல்லமே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும், வியாபார சம்பந்தமான பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் திருமணம் கைகூடி வரும். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும். தொலைதூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சிலருக்கு எல்லா விஷயத்திலும் ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைத்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்கு வாதம் செய்யாதிருப்பது நல்லது. சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபச் செய்திகள் மூலம் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க, அனுசரித்துச் செல்வது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பீர்கள். உங்கள் இல்லத்தில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். ஆழ்ந்த மனக்கவலைகள் கூட அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் விசாரணைகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அணுகுமுறை



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை அரசாங்கங்கள் பொறுப்புக்கூறல் விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய முறையில் இதுவரையில் செயற்பட்டதில்லை என்பதே உண்மை. உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களாக இருந்தாலென்ன, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களாக இருந்தாலென்ன உண்மையைக் கண்டறிவதில் அரசாங்கங்களுக்கு அக்கறை இருப்பதாக நம்புவதற்கு காரணம் இல்லை. இது விடயத்தில் முன்னைய அரசாங்கங்களுக்கும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் பெரிதாக வேறுபாடு எதையும் காணவும் முடியவில்லை.

பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்னிறுத்துவதற்கு அரச நிறுவனங்கள் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கப்படுவதைப் போன்று பொருளாதாரத்துடன் சம்பந்தப்படாத குற்றங்கள் விடயத்தில் நம்பகத்தன்மையுடன் அரசாங்கம் செயல்படுவதாக தெரியவில்லை. இந்த விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்துடனான ஊடாட்டங்களைப் பொறுத்தவரையிலும் கூட முன்னைய அரசாங்கங்கள்

ஆனால், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனும் ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பிய விரிவான கடிதம் ஒன்றில் செம்மணியிலும் வேறு பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் வெளிக்காட்டுவதாக சுட்டிக்காட்டி, அவை தொடர்பிலான விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்று வலியுறுத்தியிருக்கின்றனர்.

அதேவேளை, செம்மணி புதைகுழி விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நேர்மையுடன் நடந்து கொள்ளப் போவதில்லை என்று கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார். அந்த புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் அவருடன் சேர்ந்து நின்ற ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) போரை முழுவீச்சில் முன்னெடுப்பதற்கு ஊக்கம் கொடுத்ததை அவர் காரணமாகவும் சுட்டிக்காட்டினார்.

செம்மணியில் தோண்டியெடுக்கப்படும் மனித எலும்

கூடிய தலைவர்களே இன்று இலங்கைக்கு தேவைப்படுகிறார்கள்" என்றும் ஜனாதிபதி தனதுரையில் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பேசிய கார்டினல் ரஞ்சித் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை ஒன்றை நடத்தி அவற்றின் பின்னணியில் இருந்த சதியைக் கண்டறியுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். ஏற்கெனவே மூன்று அரசாங்கங்களிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தபோதிலும், எந்த பயனும் இல்லாத நிலை

கடைப்பிடித்த அதே அணுகுமுறைகளையே இன்றைய அரசாங்கமும் கடைப்பிடிக்கிறது. ஐக்கிய நாடுகளின் அமைப்புக்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதாக அவ்வப்போது உறுதியளிக்கின்ற அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை அரசாங்கம் நிராகரிக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அவருக்கு சகல ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் வழங்கியது. அவரும் கூட பொறுப்புக்கூறல் விடயத்தில் புதிய அரசாங்கத்திடம் ஒப்பீட்டளவில் நேர்மறையான அணுகுமுறையை அடையாளம் கண்டதைப் போன்று சில கருத்துக்களை வெளியிட்டார்.

தனது விஜயத்தின் இறுதியில் கொழும்பில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய வொல்கர் டேர்க் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தைக் கையாளுவதற்கு சர்வதேச தராதரங்களுடன் கூடிய உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றே உகந்தது என்று கூறினார். அவரது இந்த கருத்து அரசாங்கத்துக்கு பெரும் திருப்தியைக் கொடுத்திருக்கும் என்கின்ற அதேவேளை, உள்நாட்டுப் பொறிமுறைகள் தொடர்பில் இதுவரையில் கசப்பான அனுபவங்களைக் கொண்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது கடுமையான ஏமாற்றமாகவே இருந்தது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை விஜயத்தின்போது பெற்றுக்கொண்ட அனுபவங்கள் எதிர்வரும் செப்டெம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடரில் அவர் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையில் நிச்சயமாக பிரதிபலிக்கும். மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தைக் கையாளும் மைய நாடுகள் எத்தகைய புதிய தீர்மானத்தைக் கொண்டு வரப்போகின்றன என்பதே தற்போது சம்பந்தப்பட்ட சகல தரப்புகளினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சான்றுகளைச் சேகரிப்பதற்கு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் ஒரு பொறிமுறையை அமைப்பதற்கு வழிவகுத்த (தற்போது நடைமுறையில் இருக்கும்) **51-1** தீர்மானத்தை மேலும் நீடிப்பதே பயனுடையதாக இருக்கும் என்று மனித உரிமைகள் ஆர்வலர்கள் பலர் கருதுகிறார்கள். புதியதொரு தீர்மானம் சிலவேளைகளில் சான்றுகளைச் சேகரிக்கும் பொறிமுறையை இல்லாமல் செய்துவிடவும் கூடும் என்ற நியாயமான அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

யாழ்ப்பாணம் செம்மணியில் தற்போது தொடர்ச்சியாக தோண்டியெடுக்கப்பட்டுவரும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வடக்கில் கோரிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன. சர்வதேச விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தி எதிர்வரும் **26** ஆம் திகதி மக்கள் போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு சமூக இயக்கம் என்ற ஒரு அமைப்பு அழைப்பு விடுத்திருக்கிறது.

புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவருவது வரவேற்கத்தக்கது. தேசிய மக்கள் சக்தியை தவிர வேறு கட்சி ஆட்சியதிகாரத்தில் இருந்திருந்தால் இதேபோன்ற ஒத்துழைப்பு கிடைத்திருக்க வாய்ப்பு இருந்திருக்குமோ தெரியவில்லை. ஆனால், கொழும்பில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் செய்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது செம்மணி விவகாரத்தில் சர்வதேச ஈடுபாட்டுக்கான சாத்தியங்கள் குறித்து சந்தேகம் எழுகிறது.



**கார்டினல் மல்கம் ரஞ்சித் முன்னிலையில் அரசாங்கம் தன்னைத்தானே விசாரணைக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி திசாநாயக்க கூறியிருக்கிறார். குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்கு தனது அரசாங்கத்துக்கும் ஓரளவு பொறுப்பு இருக்கிறது என்பதா அவரது அந்தக் கூற்றின் அர்த்தம்?**

புக்கூடுகள் இலங்கையின் போர்கால அட்டூழியங்கள் தொடர்பில் மீண்டும் சர்வதேச மட்டத்தில் கூடுதல் கவனத்தை ஈர்க்கத்தொடங்கியிருக்கின்றன. ஆனால், அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது தடவையாக பதவிக்குவந்த பின்னரான சூழ்நிலையில் சர்வதேச புவிசார் அரசியலிலும் உலகளாவிய பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலிலும் ஏற்பட்டிருக்கும் விபரீதமான மாற்றங்களுக்கு மத்தியில் இலங்கை பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகள் எந்தளவுக்கு அக்கறை காட்டும் என்ற கேள்வி எழுகிறது.

இது இவ்வாறிருக்க, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க கடந்த வாரம் தெரிவித்த ஒரு கருத்து கவனத்துக்குரியதாக இருக்கிறது.

கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவ வாழ்வின் 50 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி திசாநாயக்க ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையைக் கண்டறிவதற்கு அரசாங்கம் தன்னைத் தானே விசாரணைக்கு உட்படுத்தவேண்டியிருக்கிறது என்றும் அது மிகவும் சவால் மிக்க பணி என்றும் கூறினார்.

அந்த தாக்குதல்களுக்கு பின்னால் உள்ள உண்மை கண்டறியப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்கச் செய்யப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

“ ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கார்டினல் ரஞ்சித் அடிக்கடி விடுகின்ற வேண்டுகோளை அரசாங்கம் அக்கறையுடன் கவனத்தில் எடுக்கும். பல சந்தர்ப்பங்களில் அமைதியான முறையில் அந்த வேண்டுகோளை விடுக்கும் கார்டினல் சில சந்தர்ப்பங்களில் குண்டுத் தாக்குதல்களைப் பேசும்போது உணர்ச்சி வசப்பட்டுவிடுகிறார். ஆனால் நாம் அவரின் வேண்டுகோளுக்கு மதிப்பளிப்போம். நீதியான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு குடிமக்களுக்கு முன்னுதாரணமாக விளங்கக்

யில், சர்வதேச விசாரணையைக் கோரப்போவதாக கார்டினல் எச்சரிக்கை விடுத்த பல சந்தர்ப்பங்கள் உண்டு.

ஜெனீவாவுக்கு சென்று முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடமும் அவர் முறைப்பாடு செய்தார். அண்மையில் இலங்கை வந்திருந்த வொல்கர் டேர்க்கும் கார்டினலைச் சந்தித்துப் பேசினார். இப்போது அவர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உண்மையைக் கண்டறியும் என்று நம்புகிறாரோ இல்லையோ வேண்டுகோள் விடுப்பதை தவிர வேறு வழியில்லை.

அரசாங்கம் தன்னைத்தானே விசாரணைக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி திசாநாயக்க கூறியது தொடர்பாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை நடத்திய கட்டமைப்பைச் சேர்ந்தோர் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் இயங்குகிறார்கள் என்பதை ஜனாதிபதி தெரிந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை அரசாங்கம் தன்னைத்தானே விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி குறிப்பிட்டதன் அர்த்தம் சவால்மிக்க நிலைவரத்துக்கு மத்தியிலும், உண்மை கண்டறியப்படும் என்பதேயாகும் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை கண்டறிவதற்கான விசாரணைகள் ஏன் தொடர்ச்சியாக தடங்கலுக்கு உள்ளாகின்றன? உண்மையைக் கண்டறிவதில் முன்னைய அரசாங்கங்களுக்கு அக்கறை இல்லாமல் இருந்திருக்கலாம் என்பதுடன் எவரையாவது பாதுகாக்க வேண்டிய தேவையும் கூட இருந்திருக்கலாம் என்று வைத்துக் கொண்டாலும், தற்போதைய அரசாங்கத்துக்கு என்ன பிரச்சினை இருக்கிறது?

**2019** ஏப்ரில் **21** ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கடந்த ஆறு வருட காலப்பகுதியில் இரு நீதிமன்ற வழக்குகள் உட்பட ஏழு உள்நாட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்திய ஆறு நாடுகளைச் சேர்ந்த புலனாய்வுத்துறை அதிகாரிகள் அறிக்கைகளை சமர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது. மேலும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது நியமித்த இரு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் வெளிச்சத்துக்கு வரவில்லை.

குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற நாட்களில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன முதலில் **2019** ஏப்ரில் **22** ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதிபதி விஜித மலலகொட தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த குழு அதன் அறிக்கையை சிறிசேனவிடம் **2019** ஜூன் **10** ஆம் திகதி கையளித்தது.

இரண்டாவதாக, குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று ஒரு மாதத்துக்கு பிறகு **2019** மே **22** பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலமாக அன்றைய பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

மூன்றாவதாக, ஜனாதிபதி சிறிசேன அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமாக **2019** செப்டெம்பர் **20** ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதிபதி ஜனக்க டி சில்வா தலைமையில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் **2021** பெப்ரவரி முதலாம் திகதி நீதியரசர் சில்வாவினால் கையளிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் அரசாங்கத்தின் வெற்றி விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியம்!





கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையின் நவீன வரலாற்றில் இடம்பெற்ற மிகவும் பாரதூரமான பொருளாதார வீழ்ச்சியை வெற்றிகொள்வதற்கு அரசாங்கங்கள் கடந்த மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலமாக முயற்சித்து வருகின்றன. தற்போதைய அரசாங்கம் மழுப்பலின்றி சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் மற்றும் நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு அனுமதிப்பதன் மூலமும் அதன் மீது சர்வதேச பங்காளிகளும் பொதுமக்களும் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

இந்த நம்பகத்தன்மை முன்னைய அரசாங்கங்கள் இதுகாலவரை பெறத்தவறிய ஒரு வாய்ப்பை இன்றைய அரசாங்கத்துக்கு வழங்குகிறது. இந்த நம்பிக்கையை போரின் மரபுக்கு முகங்கொடுப்பதற்கும் இன்னமும் பிளவுபட்டிருக்கும் நாட்டை குணப்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பயன்படுத்தமுடியும், பயன்படுத்தவும் வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் புதிய உறவுமுறை இந்த நம்பகத்தன்மையின் தெளிவான அறிகுறியாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச்சபை கடந்தவாரம் விரிவுபடுத்தப்பட்ட நிதியுதவி திட்டத்தின் நான்காவது மீளாய்வை நிறைவுசெய்து இன்னொரு 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு விடுவிப்பதற்கு அதிகாரமளித்திருக்கிறது.

முன்னைய மீளாய்வுகளின்போது செலவின நிலுவைகள் குறித்து அறிவிக்கத் தவறியதை ஒத்துக்கொண்ட அரசாங்கம் அதன் தரவுகளின் நேர்மையை மேம்படுத்துவதற்கு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை விளக்கிக்கூறியதை அடுத்து அதே அமர்வில் நிறைவேற்றுக்குழு விட்டுக்கொடுப்பைச் செய்திருக்கிறது. அபராதத்தை விதிப்பதற்கு பதிலாக சர்வதேச நாணய நிதியம் அரசாங்கம் எடுக்கவிருப்பதாக கூறிய திருத்த நடவடிக்கைகளையும் நிதித்துறை வெளிப்படைத்தன்மை மீதான ஆழமான பற்றுறுதியையும் ஏற்றுக்கொண்டு சலுகை காட்டியிருக்கிறது.

கடனுதவிகளை பெறும் நாடுகள் தவறான தகவல்களை வெளியிடும்போது சர்வதேச நாணய நிதியம் உதவியை முடக்கிவிடும். 2001 ஆம் ஆண்டில் உக்ரெயினிலும் 2004 ஆம் ஆண்டில் டொமினிக்கன் குடியரசிலும் அவ்வாறு நடந்தது. ஆனால், இலங்கை விடயத்தில் இந்த தடவை அவ்வாறு சர்வதேச நாணய நிதியம் நடந்துகொள்ளாததன் மூலம் சீர்திருத்தம் மீதான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் அதற்கு இருக்கும் நம்பிக்கையை வெளிக்காட்டியிருக்கிறது. வரி அதிகரிப்புகளும் மானியங்கள் வாபஸும் மக்களின் பொருளாதார இடர்பாடுகளை அதிகரித்திருக்கின்றன. ஆனாலும் அரசாங்கம் அத்தகைய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்கிறது.

அன்னிய செலாவணி கையிருப்பு உறுதி நிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. பணவீக்கம் குறைந்திருக்கிறது. உலகளாவிய வர்த்தகத்தில் நிலவும் கொந்தளிப்பு புதிய ஆபத்துக்களை தோற்றுவிக்கின்ற போதிலும் இலங்கையின் பொருளாதாரம் மிதமான வளர்ச்சியைக் காட்டியிருக்கிறது. இருதரப்பு மற்றும் வர்த்தக கடனுதவியாளர்களுடனான கடன் மறுசீரமைப்பு நிறைவை நெருங்குகிறது. அதேவேளை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்ற வகையில் தன்னியல்பான மின்சாரக் கட்டண விதிமுறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற பணவீக்கம் மற்றும் சம்பள அதிகரிப்பு இன்மையின் விளைவாக உண்மையான வருமானம் நெருக்கடிக்கு முன்னரான காலகட்டத்தில் இருந்த மட்டங்களை விடவும் இன்னமும் குறைவானதாகவே இருக்கிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக 2024 ஆகஸ்டில் தேசிய சமாதானப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு·வேட்பாளர் தெரிவில் மக்களின் முதல் முன்னுரிமை பொருளாதார அபிவிருத்தியாகவே இருந்ததை வெளிக்காட்டியது.

> மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதில் இருக்கும் பற்றுறுதி தொடர்பில் அவர்களின் நம்பிக்கையையும் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையையும் வென்றெடுத்ததைப் போன்று அரசாங்கம் போரில் தங்களது அன்புக்குரியவர்களை இழந்த வடக்கு, கிழக்கு மக்களின் நம்பிக்கையையும் வென்றெடுக்க முடியும்.

கலாநிதி மகேஷ் சேனநாயக்கவும் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி கிறிஷ்ணி சில்வாவும் செய்த ஆய்வு இலங்கையின் அரசியல் பின்புலத்தில் வாக்காளர்களின் நடத்தைகளை தீர்மானித்த முக்கிய காரணிகள் தொடர்பில் பெறுமதியான உள்நோக்கை தருகிறது. தொடரும் பொருளாதார பிரச்சினைக்கு மத்தியிலும், அரசாங்கத்தின் நேர்மையில் நம்பிக்கை வைப்பதற்கு வாக்காளர்கள் காத்திருக்கத் தயாராயிருந்தார்கள் என்று தோன்றியது.

பொருளாதார அக்கறைகள், தலைவர்கள் பற்றிய எண்ணம், பொது நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்ற காரணிகள் தேர்தல் தீர்மானங்களில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தின என்பதை தேசிய சமாதானப் பேரவையின் ஆய்வு ஆராய்ந்தது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி, ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றைக் கையாளுவதற்கு தெளிவான மூலோபாயங்களை முன்வைக்கும் வேட்பாளர்களை ஆதரிப்பதற்கே அதிகப் பெரும்பான்மையான வாக்காளர்கள் முன்னுரிமை கொடுத்தார்கள் என்பதை ஆய்வு வெளிக்காட்டியது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 93 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கான வேட்பாளரின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டே தாங்கள் வாக்களிக்கப்போவதாக கூறினார்கள். ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் உறுதிப்பாடு கொண்ட வேட்பாளருக்கே தாங்கள் முன்னுரிமை கொடுக்கப் போவதாக 83 சதவீதமானோர் கூறினர். உறுதியான கல்விப் பின்புலத்தைக் கொண்ட வேட்பாளர்களையே தாங்கள் விரும்புவதாக 86 சதவீதமானவர்கள் கூறினர். அரசியல் ஆதிக்க வம்சங்களுக்கு மேலாக தகுதி வாய்ந்த வேட்பாளர்களுக்கே இவர்கள் முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்பதை இது வெளிக்காட்டியது.

ஊழலைக் கையாள்வதிலும் நம்பிக்கை தங்கியிருக்கிறது. வேறு எதையும் விட தண்டனையின்மை நம்பிக்கையை விரைவாகவே அரித்துவிடுகிறது. பொருளாதாரக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னேற்றத்தை மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

அண்மையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வொன்று விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ததில் பொதுப்பணத்தை கையாடியமைக்காக இரு முன்னாள் அமைச்சர்களுக்கு இருபது, இருபத்தைந்து வருடங்கள் சிறைத்தண்டனையை விதித்தது. முன்னாள் அமைச்சரவை உறுப்பினர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இந்த சம்பவம் எந்த பதவியில் இருந்தவர்களாக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பமுடியாது என்பதையும் பொருளாதாரக் குற்றங்களுக்கு நீதிமன்றங்களில் பொறுப்புக் கூறவேண்டியிருக்கும் என்பதையும் வெளிக்காட்டியது.

தங்களது ஆணையை நிறைவேற்றுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்யாமல் இருக்குமேயானால், ஊழல் பிரச்சினையை அரசாங்க நிறுவனங்களினால் கையாளக்கூடியதாக இருக்கும் என்பதை பொலிஸ் மற்றும் நீதித்துறையுடன் சேர்ந்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நிரூபித்திருக்கின்றது. பொருளாதாரம் சம்பந்தப்படாத குற்றச் செயல்களிலும் இதே கோட்பாடு பிரயோகிக்கப்படும்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்காக முன்னாள் கருணா குழுவின் உறுப்பினர் ஒருவர் அண்மையில் கைதுசெய்யப்பட்ட சம்பவம் பொருளாதாரத்துடன் சம்பந்தப்படாத குற்றச் செயல்களை பொறுத்தவரையிலும் உறுதியாகச் செயற்படக்கூடியது சாத்தியம் என்பதை காட்டுகிறது. பொருளாதாரக் குற்றங்களைக் கையாளுவதிலும் அவற்றில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்களை சட்டத்துக்கும் நீதித்துறைக்கும் பொறுப்புக்கூற வைப்பதிலும் காணப்பட்டிருக்கும் வெற்றி மூன்று தசாப்தகால போரின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பான நீடித்த பிரச்னையை கையாளுவதற்கான வழியைக் காட்டுகிறது.

போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினையை திருப்திகரமான முறையில் கையாளுவதற்கு அரசாங்கங்கள் தவறியமை போர்க்குற்றங்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச ஈடுபாடு வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு வழிவகுத்திருக்கிறது. இதை அரசாங்கங்கள் எதிர்த்து வந்திருக்கின்றன. விசாரணையாளர்கள், வழக்குத்தொடுநர்கள் மற்றும் நீதிபதிகள் என்ற வடிவில் நேரடியான சர்வதேச தலையீடு தேசிய இறைமைக்கு பாதிப்பாக அமையும் என்று அதற்கு அரசாங்கங்கள் காரணத்தைக் கூறின. இந்த காரணத்தைக் காட்டியே கடந்த காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க் இந்த விவகாரத்தை இராஜதந்திர ரீதியாக கையாண்டார். சர்வதேச உதவி என்பது உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவு வழங்குவதே என்று அவர் அறிவித்தார். 'நம்பகத்தன்மை கொண்டதும் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைக்குரியதுமான உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுப்பதற்கு இலங்கை போராடிக் கொண்டிருக்கிறது. இதன் காரணத்தினால் தான் சர்வதேச மட்டத்திலான உதவியின் ஊடாக நீதிக்காக வெளியாரை இலங்கை எதிர்பார்க்கிறது. இறுதியில் இது இலங்கை அரசின் பொறுப்பேயாகும். இந்த செயன்முறை தேசிய ரீதியிலானதாக அமையவேண்டும். அதற்கு சர்வதேச வழிவகைகளின் ஊடாக ஆதரவையும் உதவியையும் வழங்க முடியும்' என்று வொல்கர் டேர்க் கூறினார்.

ஆனால், உள்நாட்டில் அரசியல் எதிர்ப்பு கிளம்பக்கூடிய சாத்தியத்தின் விளைவாக போர்க்குற்றங்கள் விவகாரத்தை கையாளுவதில் தயக்கம் தொடருகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் செம்மணி புதைகுழி பகுதிக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உறுதியான நிலைப்பாட்டை எடுத்த காரணத்தினாலேயே அந்த பகுதிக்கான அவரின் விஜயம் சாத்தியமானது. உயர்ஸ்தானிகர் மனித புதைகுழி பகுதிக்கு அல்ல மயானத்தின் வாசலுக்கு வருவதற்கு மாத்திரமே அனுமதிக்கப்பட வேண்டும் என்று அரசாங்க பிரதிநிதிகள் தெரிவித்த ஆட்சேபத்தை நீதிமன்றம் நிராகரித்தது. சுயாதீனமானதும் வெளிப்படையான கண்காணிப்புடன் கூடியதுமான செயன்முறை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசாங்கத்தின் மதிப்பை வலுப்படுத்தும்.

சான்றுகளைப் பேணிக்காப்பதையும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஆய்வுகூட ஆராய்ச்சியையும் கண்காணிப்பதற்கு சுயாதீனமான அவதானிகளை அனுமதித்தல் அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் கோரிநிற்கும் உத்தரவாதத்தை வழங்கக்கூடியதாக இருக்கும். அத்தகைய வெளிப்படைத் தன்மைக்கான வகைமா

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# தோழர் ஜனாதிபதி அநுர அவர்களே! என்ன செய்யப்போவதாக உத்தேசம்?

தோழர் ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க அவர்களுக்கு! ஊடகப் பயணத்தில் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்யவுள்ள ஒருவன் தங்களுக்கு எழுதும் கடிதம் இது.

இக்கடிதத்தை இன்னமும் இரண்டு மாதங்கள் கழித்து - தங்களின் ஜனாதிபதி பதவி ஒரு வருட முடிவின்போதே எழுத எண்ணியிருந்தேன். ஆனால், காலத்தின் தேவை இப்போது எழுத வைத்துள்ளது.

'காலத்தின்' என்று இங்கு குறிப்பிடுவதன் அர்த்தம், தமிழராய்ப் பிறந்த குற்றத்துக்காக காரணம் ஏதுமின்றி காலமாக்கப்பட்டு புதைகுழிக்குள் மூடப்பட்ட அறுபத்தைந்து (இதுவரை) அப்பாவிகள் எலும்புக்கூடுகளாகவும், எச்சங்களாகவும் மீட்கப்பட்டுள்ளதானது, இன்னமும் இரண்டு மாதங்கள்வரை பொறுத்திருக்க எனக்கு இடம் தரவில்லை.


ஆணா பெண்ணா என்று அடையாளம் காணமுடியாதவர்கள், பாடசாலை மாணவர்கள், குழந்தைகள், அவர்களின் புத்தகப் பைகள், ஆடைகள், விளையாட்டுப் பொம்மைகள், காலணிகள், கண்ணாடி வளையல்கள் என்று இரண்டு வாரமாக புதைகுழிக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளன. குழிகளைத் தோண்டியவர்களுக்கு ஓய்வு வழங்குவதற்காக சில நாட்களுக்கு மேலும் குழிகளைத் தோண்டுவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நான் பிறந்தது இலங்கையின் யாழ்ப்பாணத்தில். 1972ல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் புதிய அரசியலமைப்பின் பின்னர் இத்தீவு சிறீலங்கா என மாற்றப்பட்டபோது நான் விரும்பாமலே சிறீலங்கா பிரஜையானேன். 1983 இனப்படுகொலையில் அகப்பட்டு உயிர் தப்பி கொழும்பிலிருந்து பிறந்த மண்ணுக்கு வந்த பின்னர் தமிழீழ பிரஜையானேன். ஆக, இந்தக் குட்டித்தீவில் இலங்கை, சிறீலங்கா, தமிழீழம் ஆகியவற்றின் பிரஜையான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது இலங்கையின் அரசியல் சீர்கேட்டை எடுத்துக் காட்டும் அறிகுறி.

இலங்கையில் இரண்டு தடவை ஆயுதப் புரட்சி மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற உங்களின் மூல அமைப்பான ஜே.வி.பி., 1971 ஏப்ரல் ஐந்தில் முதலாவது புரட்சியை மேற்கொண்டபோது நீங்கள் மூன்று வயதுப் பாலகன். அப்போது நீங்கள் மாத்தளையின் தெவகுவாவில் இருந்தீர்களோ அல்லது அநுராதபுர மாவட்டத்தின் தம்புத்தேகமவில் மகாவலி அபிவிருத்திக் காணியில் வசித்தீர்களோ தெரியாது.

1971 புரட்சியின்போது அப்போதைய பிரதமர் சிறிமாவோவை உயிருடன் அல்லது சடலமாக பிடிப்பதும், இரவோடிரவாக ஆட்சியைக் கைப்பற்றுவதும் ஜே.வி.பி.யின் இலக்காக இருந்தது. ஆனால், சிறீமாவோவை காப்பாற்ற அன்றைய இந் திய பிரதமர் இந்திரா காந்தி தமது ராணுவத்தையும், உலங்கு வானூர்திகளையும் இரவோடிரவாக அனுப்பி, சிறிமாவோவை நடுக்கடலில் நின்ற இந்திய கடற்படைக் கப்பலில் பௌத்திரமாக ஏற்றியது மட்டுமன்றி, ஒன்றரை டசின் ராணுவ உலங்கு வானூர்திகள் மூலம் களுத்துறை முதல் கதிர்காமம் வரையான காடுகளை ரசாயனத் தாக்குதல் மூலம் எரித்து ஆயிரக்கணக்கான உங்கள் மூத்த தோழர்களை காணாமலாக்கிய வரலாற்றை இலகுவாக மறந்துவிட முடியாது. (காலம்தான் எல்லாவற்றையும் மறக்கப் பண்ணி விடுமே! நீங்கள் ஜனாதிபதியானதும் உங்களது முதல் பயணம் இந்தியாவாகத்தானே அமைந்தது).

இலங்கையின் முதலாவது ஆயுதப் புரட்சியை விசாரிக்க முதற்தடவையாக குற்றவியல் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு 1972 யூன் 12ல் விசாரணைகள் ஆரம்பமாகின. இரண்டரை வருட விசாரணையின் பின்னர் ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர உட்பட நூற்றுக்கணக்கான உங்கள் தோழர்களுக்கு ஆயுட்தண்டனை வழங்கப்பட்டது. இவ்வாறு தண்டனை பெற்றவர்களில் ஒருவர் சிறிமாவோவின் உறவினரான ஹம்பகா தொகுதி எம்.பி.யாகவிருந்த எஸ்.டி. பண்டாரநாயக்க.



சிங்கள் தேசத்தின் நான்கு பிரதான கட்சிகளையும் இழுத்து வீழ்த்திவிட்டு, அறகலய வழியாக ஆட்சிக் கட்டிலில் ஏறியவர் அநுர குமர திஸ்ஸநாயக்க. ஆர்ப்பாட்டமற்ற செயற்பாடு, கவர்ச்சியான நடையுடை, ஒவ்வொருவரையும் சுண்டித் தம்பக்கம் இழுக்கும் பேச்சாற்றல் என்பவை அநுரவுக்கு இயற்கையாகக் கிடைத்த கொடை. அதனை மூலாதாரமாக வைத்து நீண்ட காலத்துக்கு மக்களை ஏமாற்ற முடியுமா?

இரண்டரை வருட கால இந்த விசாரணையை நூற்றுக்கணக்கான ஊடகங்களின் செய்தியாளர்கள் வரிக்கு வரி தங்கள் ஊடகங்களில் பதிவு செய்தனர். அப்போது லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் செய்தியாளர்கள் குழுவில் இடம் பெற்ற நானும், தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் 94 வயதான பொன்.பாலசுந்தரம் அவர்களுமே இப்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் ஆரம்பகால தலைவர் றோகண விஜேவீரவை இரு தடவைகள் நேரடியாகச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1987 - 1989 கால உங்களது ஜே.வி.பி.யின் அரசுக்கு எதிரான இரண்டாவது போராட்டம் பற்றி உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை. அப்போது நீங்கள் பல்கலைக்கழக மாணவனாக, தீவிர மார்க்சிஸ சித்தாந்த இளைஞனாக துடிப்போடு இருந்தீர்கள். சில காலம் தலைமறைவு வாழ்க்கையையும் மேற்கொண்டீர்கள். அவ்வேளையில் உங்கள் பெயரை அரவிந் எனவும் மாற்றிக் கொண்டீர்கள். இலங்கை அரசும் இந்தியாவும் இணைந்து தமிழருக்கு ஏதோ வழங்கப் போவதாகக் கூறி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ராஜிவ் காந்தியும் ஒப்பந்தம் செய்தபோது அவ்வேளையில் அதனை பகிரங்கமாக எதிர்த்தவர்கள் உங்கள் தரப்பினர். தமிழ் கடவுள் முருகனுடன் போர் புரிந்த சூரன் அவ்வப்போது தனது வேசங்களை மாற்றியதுபோல 1987 - 1989 காலத்தில் உங்கள் அமைப்பையும் தேசப்பிரிய ஜனதா வியாபாரய என மாற்றிக் கொண்டது ஒருவகை அரசியல்.

இந்திய எதிர்ப்புக் கொள்கையை முன்னிறுத்தி இடம்பெற்ற போராட்டத்தின் போது அப்பாவித் தமிழர்களான பலர், லட்சாதிபதியான தமிழ் வணிகர்கள் இலக்கு வைத்து உங்கள் தரப்பினால் கொல்லப்பட்டனர். சிங்கள திரைப்படங்களை பெருமளவில் தயாரித்த சினிமாஸ் அதிபர் குணரட்ணம் ஏன் கொல்லப்பட்டார் என்பது இதுவரை தெரியவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் உங்கள் தாயார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், நீங்கள் மாணவராக இருந்த காலத்தில் ரொஸ்கி, மார்க்ஸ், லெனின், காஸ்ரோ போன்றவர்களின் நூல்களோடு மகாத்மா காந்தியின் ஆளுமையால் ஆகர்சிக்கப்பட்டு அவரின் நூல்களையும் ஆர்வத்துடன் படித்ததாக குறிப்பிட்டிருந்தார். அதனாற்தான் போலும், 1987 - 1989 காலத்தில் உங்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களுக்கும், கொலைகளுக்கும் மன்னிப்பு கேட்டு உங்கள் மனப்போக்கை வெளிப்படுத்தினீர்கள். குற்றம் புரிந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்க எந்தத் தடையும் இல்லை. ஆனால், அதனை மறந்துவிட முடியாது. நினைவுகள்தானே மனிதனின் உயிர்நாடி.

இவைகள் ஒருபுறமிருக்கட்டும். நிகழ்காலத்துக்கு வருவோம். கடந்த வருட ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நீங்கள் மாணவர் குழுத்தலைவராக,. மார்க்சிஸ சிந்தனைக் குழாம் அமைப்பாளராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, ஜே.வி.பி.யின் நம்பிக்கைக்குரிய தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக, சந்திரிகா குமாரதுங்கவின் அரசில் சில வருடங்கள் பல்துறை அமைச்சராக என்று படிமுறையாக ஜனாதிபதியானவர்.

ஆற்றொழுக்கான உங்கள் பேச்சாற்றல் - இதனை பேச்சு என்று சொல்ல முடியாது, பெரும் கூட்டத்தின் முன்னால் மேடையில் நின்றவாறு ஒவ்வொருவருடனும் உரையாடுவது போன்று கண் இமைகளை உயர்த்தி, கைகளை விரித்து, அணைத்து, தேவைப்படும்போது முன் [illegible] எழுந்து ஆற்றிய உரைகளை கடந்த மூன்று தேர்தல்களிலும் காண முடிந்தது. அந்தக் கவர்ச்சியே மக்களை உங்கள் பக்கம் இழுத்தது. அதன் அறுவடையை கடந்த மூன்று தேர்தல்களிலும் காணமுடிந்தது.

சொல்லப்போனால் இன்றைய ஆட்சியை, ஜே.வி.பி. ஆட்சியாக எவரும் பார்க்கக் கூடாது என்பதற்காகவே தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) என மாற்றிக் கொண்டீர்கள். கடந்த ஐம்பதாண்டுகளில் ஜே.வி.பி. தனக்கு இட்டுக் கொண்ட மூன்றாவது பெயர் இது. எனினும் இன்றைய ஆட்சியை அநுரவின் அரசு என்றே அனேகமானவர்கள் கூறுவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், உங்களின் பின்னால் உங்கள் தாய்க் கட்சியான ஜே.வி.பி.யும் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும் காய்களை நகர்த்துபவர்களாக இருப்பதே உண்மை.

தேர்தல் காலங்களில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டங்களில் நீங்கள் என்னவெல்லாம் சொன்னீர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? நிச்சயமாக இருக்கும். எனினும், உங்கள் நினைவுக்காக முக்கியமான ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

- ரணிலின் ஆட்சிக்காலத்தில் உங்கள் 'ஆட்கள்' மது விற்பனை பர்மிட் பெற்றுள்ளார்களாமே! இது உங்களுக்குத் தெரியுமா என்று நீங்கள் கேட்க, ஓம் என்று பொதுமக்கள் குரல் எழுப்பி, உங்கள் ஆட்சியில் இவைகளை கவனிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினர்.
- கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை ஒன்றை மகிந்த கட்டினார். கமலஹாசனின் தசாவதாரம் போல நாடு முழுவதும் தனக்கான மாளிகைகளை அவர் நிறுவினார். இந்த மாளிகை எனக்கு வேண்டாம். கீரிமலை மாளிகை உங்களுக்கு வேண்டுமா என்று திரண்டிருந்த மக்களைப் பார்த்து கேட்டீர்கள். இந்த வினாவுக்கு தங்கள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்து வானதிர மக்கள் குரல் எழுப்பினர்.
- 13ம் திருத்தத்தை செயற்படுத்துவேன் என்றும், கூட்டாட்சி முறையை தருகிறேன் என்றும் உங்களுக்கு உறுதி கூறி உங்கள் வாக்குகளைக் கேட்க நான் இங்கு வரவில்லையென்றும் அடித்துக் கூறினீர்கள்.
- சில தமிழ் அரசியல்வாதிகளை அதன் பிறகு சந்தித்த பின்னர் மாகாண சபைகள் தொடர்ந்து செயற்படும் என்று சொன்னீர்கள்.
- பயங்கரவாத தடைச்சட்டம் நிச்சயமாக நீக்கப்படுமென்று பகிரங்கமாகத் தெரிவித்தீர்கள்.

உங்கள் நெஞ்சைத் தொட்டு சொல்லுங்கள். நீங்கள் கூறியவற்றில் எதனையாவது இந்தப் பத்து மாதத்தில் நிறைவேற்றியுள்ளீர்களா? குறைந்தது இவைகளுக்கான ஆரம்பப் பணிகளையாவது தொடக்கியுள்ளீர்களா?

இங்கு எழுத விரும்பிய விடயம் செம்மணி பற்றியது. நீங்கள் அமைச்சர் பதவி வகித்த சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் செம்மணியில் ஆரம்பமான புதைகுழி இப்போது அதன் அருகாமையிலுள்ள சித்துப்பாத்தி வரை நீட்சி பெற்று தமிழ் மக்களை சில்லிட வைத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் கட்சிக்கு தமிழர்களும் வாக்களித்து பிரதிநிதிகளை தந்தவர்கள் என்ற வகையிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் இது தொடர்பாக ஒரு வார்த்தையாவது உங்களால் கூற முடிந்ததா? ஏன் முடியவில்லை?

இது தொடர்பாகவும் மேலும் பல விடயங்களுடனும் அடுத்த வாரம் மீண்டும் சந்திப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போரின்போது சரணடைந்த 29 சிறார்கள் புதைக்கப்பட்டார்களா?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையில் யாழ்ப்பாணம் செம்மணி - சிந்துப்பாத்தி பகுதிகளில் கண்டறியப்பட்ட மனிதப் புதைக்குழியில் சிறுவர்களின் எலும்புகள், பொம்மைகள், புத்தகப் பைகள் கிடைத்துள்ள நிலையில், இவை இறுதி யுத்தக் காலத்தில் ராணுவத்திடம் சரணடைந்த 29 குழந்தைகளுடையதா என்ற சந்தேகத்தை வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் எழுப்பியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டை இலங்கை ராணுவம் மறுத்துள்ளது.

இலங்கையில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைக்குழியிலிருந்து இதுவரை 40 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது டன், அவற்றில் 34 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய, சட்ட மருத்துவ அதிகா ரியின் கண்காணிப்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மனிதப் புதைக்குழியை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞர் எஸ்.நிரஞ்ஜன் தெரிவிக்கின் றார்.

அத்துடன், மனிதப் புதைக்குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சாட்சிப் பொருட்கள் வழக்கு எண்களின் அடிப்படையில் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அதேவேளை, குழந்தையொன்றின் மனித எலும்புக்கூடொன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் இரண்டு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள குழந்தைகளின் எலும்புக்கூடுகளை தோண்டி எடுக்கும் நடவடிக்கை தொடர்ந்து வருவதாக வழக்கறிஞர் எஸ்.நிரஞ்ஜன் குறிப்பிடுகின்றார்.



சித்துபாத்தி மனிதப் புதைக்குழியிலிருந்து சிறார்களின் எலும்புக்கூடுகள் தொடர்ச்சியாக தோண்டி எடுக்கப்பட்டு வருகின்ற பின்னணியில், இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் தமது பெற்றோருடன் ராணுவத்திடம் சரணடைந்த 29 குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா தெரிவிக்கின்றார்.

இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் சிறார்களின் பெயர் விபரங்கள் அடங்கிய ஆவணமொன்றை லீலாதேவி ஆனந்த நடராஜா தயாரித்துள்ளார். இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் சிறார்களில் பெரும்பாலானோர் இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமலாக்கப்பட்ட சிறார்களுக்கு இன்று வரை என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த நிலையில், சித்துபாத்தி மனிதப் புதைக்குழியிலிருந்து சிறார்களின் எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்படுவதுடன், அந்த இடத்திலிருந்து சிறுவர்கள் பயன்படுத்தும் புத்தகப் பை, பொம்மை, பாதணி, ஆடை என்ற வகையிலான சில சாட்சிப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் சிறார்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் வெளியிடுகின்றனர்.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ராணுவம் முழுமையாக நிராகரிப்பதாக இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.



பெற்றோருடன் ராணுவத்திடம் சரணடைந்த 29 குழந்தைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

டி.என்.ஏ பரிசோதனை செய்வது பற்றி கேள்வி எழுப்பிய போது, 'டி.என்.ஏ பரிசோதனை செய்து அவற்றை சேமித்து வைக்க வேண்டும் என்பதில் எனக்கும் மாற்று கருத்து இல்லை. தாய், தந்தையருடன் சரணடைந்த 29 குழந்தை பிள்ளைகள் எங்கேயோ ஒரு இடத்தில் உயிர் வாழ்ந்தால், அவர்களை இனங்காண்பதற்கு டி.என்.ஏ பரிசோதனை தேவை. இது எனது தனிப்பட்ட கருத்து. எலும்புக்கூடுகளை டி.என்.ஏ பரிசோதனை செய்து, நாங்கள் அவர்களுக்குரிய இறுதி சடங்குகளை செய்வதற்கான தேவை எங்களுக்கு ஏற்படவில்லை.

அந்த எலும்புக்கூடாக்கியவர்கள் யார்? அவர்களுக்கு என்ன தண்டனை?. அதில் தான் எங்களுக்கு அக்கறை இருக்கின்றதே தவிர, டி.என்.ஏ பரிசோதனை செய்து அவர்களுக்கு கிரியைகள் செய்ய வேண்டிய தேவை இல்லை.

இதை செய்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டும். அதுதான் மீள் நிகழாமைக்கான ஒரேயொரு வழி. குற்றம் செய்தவர்கள் தண்டனை அனுபவிக்கப்பட வேண்டும்" என லீலாதேவி ஆனந்த நடராஜா கூறினார்.

டி.ஏன்.ஏ பரிசோதனையை செய்ய வேண்டாம் என தான் கூறவில்லை என தெரிவித்த அவர், நீதிக்கான பயணத்தில் எந்தவித வேக குறைப்பும் இடம்பெறக்கூடாது என்றார்.

இலங்கையில் சுமார் நான்கு தசாப்த காலப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 20திற்கும் அதிகமான மனிதப் புதைக்குழிகளை விடவும், சித்துபாத்தி மனிதப் புதைக்குழி அகழ்வு பணிகளுக்கு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணம் பொலிஸாரின் நேரடி பாதுகாப்புக்கு மத்தியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த பகுதிக்குள் அனுமதிக்கப்பட்ட தரப்பினரை தவிர, ஏனையோருக்கு செல்ல யாழ்ப்பாணம் நீதிமன்றம் முழுமையாக தடை விதித்துள்ளது.

குறிப்பாக ஊடகவியலாளர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன், ஏ-9 வீதியில் சித்துபாத்தி மனிதப் புதைக்குழிக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தவும் பொலிஸார் தடை விதித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அதேவேளை, இலங்கை மின்சார சபையின் உதவியு [illegible] இவ்வேளை யிலும் அகழ்வு பணிகள் இடம்பெற்று வந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்த பகுதியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் முழு நேரமாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் முன்னிலையாகி யுள்ள சட்டத்தரணிகளும் மேற்பார்வை செய்து வருவதை காண முடிகின்றது.

யாழ்ப்பாணத் தின் சர்ச்சைக்குரிய மனிதப் புதைக்குழியான செம்மணி மனி தப் புதைக்குழிக்கு அருகிலேயே இந்த சித்துபாத்தி மனிதப் புதைக்குழியும் கண்டு பிடிக்கப் பட்டு, அகழப்பட்டு வருகின் றது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரில் 1990ம் ஆண்டு காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மக்கள், ராணுவத்தினால் கொலை செய்யப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக அப்போதைய ராணுவ வீரர் ஒருவரின் தகவல் வழங்கப்பட்ட நிலையில் அந்த பகுதி தோண்டப்பட்டது.

இந்த நிலையில், அங்கிருந்து பல மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டதுடன், அந்த நடவடிக்கை ஒரு கட்டத்தில் இடைநிறுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில், தற்போது செம்மணியை அண்மித்த சித்துபாத்தி இந்து மயானத்தில் மற்றுமொரு மனிதப் புதைக்குழி கண்டுபிடிக்கப்பட்டு தோண்டப்பட்டு வருகின்றது.

இந்த மனிதப் புதைக்குழியிலிருந்து சிறுவர்களுடையது என சந்தேகிக்கப்படும் மனித எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

செம்மணி பகுதியிலுள்ள பழைய மனிதப் புதைக்குழி மீண்டும் தோண்டப்படுமா என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மனிதப் புதைக்குழியை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞர் எஸ்.நிரஞ்ஜனிடம் வினவியபோது,



அவ்வாறான எண்ணம் இதுவரை கிடையாது என அவர் பதிலளித்தார். தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சித்துபாத்தி அகழ்வு பணிகள் முடிவடைந்ததை அடுத்தே அது தொடர்பில் சிந்திக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். செம்மணி பழைய மனிதப் புதைக்குழியை மீண்டும் தோண்டுமாறு இதுவரை எவரும் கோரிக்கை முன்வைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

சித்துபாத்தி பகுதியில் செய்மதி ஊடாக அடையாளம் காணப்பட்ட பகுதியொன்று நீதிமன்ற உத்தரவிற்கு அமைய தோண்டப்பட்டு வருகின்றது. இந்த இடத்திலிருந்து ஆடையொன்றை ஒத்ததான துணியொன்றை அகழ்வாளர்கள் கண்டுபிடித்திருந்தனர். அத்துடன், அந்த இடத்தில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு தற்போது தோண்டப்பட்டு வருகின்றன. மேலும், இந்த இடத்திலும் மனித எலும்புக்கூடுகள் காணப்படக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்த பகுதி தோண்டப்பட்டு வருகின்றது.

செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைக்குழி விவகாரம் தொடர்பில் அரசாங்கம் பூரண ஒத்துழைப்புகளை வழங்கும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களுக்கு அண்மையில் தெரிவித்திருந்தார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் உலகில்... மாறாத போர்கள்...

மனீஷ் திவாரி

உலகின் தற்கால நிகழ்வுகள் குறித்து நமக்கு சில கேள்விகள் எழுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய ஒழுங்குமுறைமை மடிந்துவிட்டனவா? இல்லை புதிதாக ஒரு ஒழுங்கமைப்பு உருவாக்கப்படவே இல்லையா? நாம் இன்னும் கற்கால உலகில்தான் இருக்கிறோமா? இல்லையென்றால் 17, 18-ஆம் நூற்றாண்டில் இருந்த பழைய நிலைக்குத் திரும்புகிறோமா? என்பவைதான் அவை.

இப்போது 5 கண்டங்களில் ஒரே நேரத்தில் சண்டை நடைபெறுவதை உலகம் அச்சத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. சர்வதேச வர்த்தகக் கட்டமைப்பைச் சீர்குலைக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மேற்கொண்ட செயலால் உலகம் முழுவதும் முன்னெப்போதும் இல்லாத வர்த்தகப் பதற்றம் அதிகரித்துள்ளது.

2022, பிப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. 2023 அக்டோபரில் இருந்து இஸ்ரேலுக்கும் ஹமாஸ், ஹிஸ்புல்லா, ஹூதி, ஈரான் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது.

இதுதவிர, கடந்த 30 ஆண்டுகளாக சீனா பல்வேறு பகுதிகளில் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறது. 26 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கார்கில் போருக்குப் பிறகு, இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் ஒரு பெரிய மோதலை நடத்தியுள்ளன. ஈரான் மீது அமெரிக்கா பூமியைத் துளைத்து தாக்கும் குண்டுகளை வீசியுள்ளது.

ஐரோப்பாவில் அச்சு இயந்திரத்தின் வருகை அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சீர்திருத்தம், மறுமலர்ச்சி ஆகியவை மனிதநேய இயக்கங்களுக்கு வலுவூட்டின. அந்தக் காலகட்டத்தில் எழுந்த நவீன சிந்தனைகளைப் போன்ற எழுச்சி இப்போதும் இந்த நேரத்திலும் நமக்கு அவசியமாகிறது.

1648-ஆம் ஆண்டு வெஸ்ட்பாலியா அமைதி ஒப்பந்தம் மூலம் ஐரோப்பாவில் நீடித்து வந்த '30 ஆண்டு போர்' மற்றும் '80 ஆண்டு போர்" ஆகியவை முடிவுக்கு வந்தன. இதன்பிறகு, 17-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் பிரான்ஸ் தலைமை அமைச்சரான கார்டினல் டி ரிச்செலியூ ஒவ்வொரு நாடும் அதனதன் தேச நலன்களுக்காக மட்டும் செயல்படுவது என்ற கருத்தை முன்வைத்தார். இது மோதல்களைத் தவிர்க்க வழிவகுத்ததுடன், அதிகாரச் சமநிலை, நாடுகள் இடையே ஒத்துழைப்பு, கூட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்க முதல்படியாக அமைந்தது.

பின்னர், இது டச்சு நாட்டைச் சேர்ந்த மனிதநேய ஆர்வலரும் பல்துறை வல்லுநருமான ஹ்யூகோ க்ரோடியஸால் புதிய கருத்தாக்கமாக உருவாக்கப்பட்டது.

17-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பிரிட்டன் மன்னர் மூன்றாம் வில்லியம் மூலம் இந்தப் புதிய சர்வதேச அரசியல் முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இப்போது, சர்வதேச அளவில் நாடுகள் இடையே உறவை மேம்படுத்தும் நடைமுறைகளுக்கு இதுவே அடிப்படைக் கட்டமைப்பாகவும் இருந்தது.

இதன்பிறகு, 1815-ஆம் ஆண்டு வியன்னா மாநாடு மூலம் பிரெஞ்சுப் புரட்சி மோதல்கள், நெப்போலியன் நடத்திய போர்கள், ரோமப் பேரரசு கலைப்பு ஆகியவற்றுக்குப் பிறகு எழுந்த பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்பட்டது. இதன்மூலம், அடுத்த 99 ஆண்டுகளுக்கு (முதல் உலகப் போர் ஏற்படும் வரை) ஏதோ ஒருவகையில் பெரிய மோதல்கள் எழாமல் அமைதி நீடித்தது. (1854-56 கிரிமியா போர்களைத் தவிர).

1892, மே மாதம் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் நிகோலே கிர்ஷிக்கு அந்நாட்டு ராணுவ ஜெனரல் நிகோலாய் ஒர்புச்சேவ் ஒரு குறிப்பை எழுதினார். அதில் போர் எந்தெந்தச் சூழல்களில் எழுகிறது என்பதை விளக்கியிருந்தார். 'முன்பு யார் முதலில் தாக்குதலைத் தொடங்கினார்கள் என்பதுதான் போர் தொடங்கக் காரணமாக இருந்தது. ஆனால், இப்போது முதலில் யார் அணி திரள்கிறார்கள் என்பதே போர் உருவாகக் காரணமாகி விடுகிறது" என்று கூறியிருந்தார்.

> நாம் இப்போது மீண்டும் பழைய உலகின் ஒழுங்கமைப்புக்கே திரும்பிவிட்டோம். இது வரும் ஆண்டுகளில் படிப்படியாக மீண்டும் ஒரு புதிய ஒழுங்கமைப்பை நோக்கிச் செல்வதற்கான அடித்தளமாகவும் இருக்கும் இருந்தால் மனித இனத்துக்கு நல்லது.

1914, ஜூன் 28-ஆம் தேதி ஆஸ்திரிய-ஹங்கேரி பட்டத்து வாரிசு பிரான்ஸ் பெர்டினண்ட் கிளர்ச்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். அடுத்த ஒரு மாதத்துக்குள் போருக்கான அணி திரளத் தொடங்கியது. போருக்கு துணிந்த ஒவ்வொரு நாடும் ஒரு நியாயப்படுத்தும் காரணத்தைக் கூறிக் கொண்டன. ஐரோப்பாவை ஒரு பெரும் போர் தொற்றிக் கொண்டது.

ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகியவை ஓரணியில் திரள, எதிராக ஐரோப்பாவில் உள்ள ராணுவ வல்லமை மிக்க பிற நாடுகள் போர்க்கொடி தூக்கின. முதல் உலகப் போர் தொடங்கியது. 1918-இல் 1.7 கோடி பேரை பலி கொண்ட பிறகுதான் அந்தப் போர் ஓய்ந்தது.

20 ஆண்டுகளுக்குப் பிறகு, இதேபோன்ற போர்க் கூட்டணி அமைப்பின் காரணமாக இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. 1938-இல் ஜெர்மானியப் படை ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தது. ஜெர்மன் மொழி பேசும் செக்கோஸ்லோவாகியா நாட்டின் ஒருபகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அடுத்த ஓராண்டில் 1939 செப்டம்பர் 1-ஆம் தேதி ஹிட்லரின் நாஜிப்படை போலந்துக்குள் புகுந்தது.

ஆங்கிலேய-போலந்து ஒப்பந்த விதிகளின்படி ஜெர்மனி மீது போரை பிரிட்டன் அறிவித்தது. அடுத்த இரு நாள்களில் பிரிட்டனுக்கு ஆதரவாக பிரான்ஸும் போரில் குதித்தது. இறுதியாக இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த போது 8.5 கோடி உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தன.

இந்த அணி திரளும் போக்கு, போர் கூட்டணி முறை ஆகியவை தொடர்ந்து பனிப்போராக முன்னெடுக்கப்பட்டது. வல்லரசு நாடுகள் அனைத்தும் ஒன்று மற்றொன்றை அழிக்கும் அளவுக்கு அணு ஆயுதத்தைப் பெருக்கிக் கொண்டன. யார் அணுகுண்டு வீசினாலும் அவர்களும் அழிவுக்கு உள்ளாவார்கள் என்ற அளவுக்கு நிலைமை சென்றது.

1991-இல் சோவியத் ரஷ்யா உடையும் வரை இந்த நிலை தொடர்ந்தது. தற்போது, முன்னெப்போதும் இல்லாத அணு ஆயுதங்களின் தயாரிப்பில் உச்ச காலகட்டத்தில் இருக்கிறோம்.

2001, செப்டம்பர் 11-இல் அமெரிக்காவில் உலக வர்த்தக மைய அடுக்குமாடி கட்டடங்கள், அந்நாட்டு ராணுவத் தலைமையகமான பென்டகன் ஆகியவற்றை பயங்கரவாதிகள் விமானங்களைக் கடத்திச் சென்று மோதி தகர்த்தனர். இதையடுத்து, தாராளமய ஜனநாயகம் புறக்கணிக்கப்பட வேண்டிய கருத்தாக்க மாகியது. இந்த மோசமான பயங்கரவாதத் தாக்குதல் சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற புதிய கோணத்தை நோக்கி உலகை நகர்த்தியது.

2001 முதல் 2021-ஆம் ஆண்டு காலகட்டம் வரை ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த போர்கள், மோதல்கள் அந்நாட்டு மக்களுக்கு ஜனநாயகத்தை மீட்டுத் தரவில்லை. ஆப்கானிஸ்தானில் போருக்கு, அமெரிக்கா 2.3 டிரில்லியன் டாலர் வரை அதாவது ஒரு நாளுக்கு கிட்டத்தட்ட 300 கோடி டாலர் செலவிட்ட போதிலும் ஆப்கானிஸ்தானில் ஜனநாயகம் மேம்படவில்லை.

20 ஆண்டுகளுக்கு முன்பு, எந்த தலிபான்களை ஆப்கானிஸ்தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அமெரிக்கா வெளியேற்றியதோ, அதே தலிபான்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் திரும்பும் நிலை ஏற்பட்டது.


தங்கள் நாட்டைப் பாதுகாக்கும் உரிமை என்ற பெயரில் 2011-இல் லிபியா மீதான அமெரிக்கப் படையெடுப்பு அந்த நாட்டு ஜனநாயகத்தை மீட்டுத் தரவில்லை. 2003-ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பு ஈராக் அதிபர் சதாம் உசேனை ஒழிப்பதற்காகவே இருந்தது. அதேபோல, லிபியாவில் மம்மர் கடாஃபியின் சர்வாதிகார ஆட்சியை ஒழிப்பதே அமெரிக்கப் படையெடுப் புக்கு காரணமாக இருந்தது.

1990-களில் கம்யூனிஸத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, சீனா ஜனநாயகமாக மாறவில்லை, அங்கு பெரிய அளவிலான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டமும் ஏற்படவில்லை. பிற நாடுகளுடன் கலாசார மோதல்களையும் நிகழ்த்தவில்லை. சீனாவின் தேசநலனாகக் கருதப்படும் விஷயங்களே அந்நாட்டை வழி நடத்தின.

மக்களும், நாடுகளும் இப் போதும் இரு அடிப்படை விதிகளைக் கொண்டே நிர்வகிக்கப்படுகின்றன. இவை 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கொள்கைகள். அவை, முதலில் நாட்டு நலனுக்கு முன்னுரிமை அளிப்பது, அடுத்து அதிகாரத்தை முறையாகப் பகிர்வது மற்றும் பிற நாடுகளுடன் தேவைக்கு ஏற்ப இணைந்து செயல்படுவது.

இதன்படி நாம் இப்போது மீண்டும் பழைய உலகின் ஒழுங்கமைப்புக்கே திரும்பி விட்டோம். இது வரும் ஆண்டுகளில் படிப்படியாக மீண் டும் ஒரு புதிய ஒழுங்கமைப்பை நோக்கிச் செல்வதற்கான அடித்தளமாகவும் இருக்கும் இருந்தால் மனித இனத்துக்கு நல்லது.

(கட்டுரையாளர்: முன்னாள் இந்திய மத்திய அமைச்சர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவை நிலைகுலைய வைக்கும் ட்ரம்பின் வரி விதிப்பு!

# கவலையில் உற்பத்தியாளர்கள்!!



ஜப்பானிய பொருட்களுக்கு 25 வீத வரி விதிப்பதாகக் கூறி, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் அச்சுறுத்தியதை, ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா "மிகவும் வருந்தத்தக்கது" என்று விவரித்தார்.

அமெரிக்காவின் நீண்டகால நட்பு நாடான ஜப்பான், இதைத் தவிர்க்க கடுமையாக முயல்கிறது. தனது கார் தயாரிப்பு நிறுவனங்களுக்கு சலுகைகள் கோரும் அதேவேளையில், அமெரிக்காவில் உற்பத்தியாகும் அரிசிக்கு சந்தையைத் திறக்க வேண்டும் என்றும் அழுத்தம் தரப்படுவதை அந்நாடு எதிர்க்கிறது.

இதற்காகப் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

ஏப்ரல் 2025 முதல், ட்ரம்ப் நட்பு மற்றும் எதிரி நாடுகளுக்கு எதிராக கடுமையான வரிகளை அறிவித்த பிறகு, ஜப்பானின் வர்த்தக அமைச்சர் ஏழு முறை வாஷிங்டனுக்கு சென்றுள்ளார். ஆனால், இந்த பயணங்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்ததால், முன்பு ஜப்பானை "கடினமானது" என்று கூறிய ட்ரம்ப், தற்போது அதை "மோசமானது" என்று அழைக்கத் தொடங்கினார்.

இந்த வாரம், 23 நாடுகளுக்கு அனுப்பப்பட்ட வரிக் கடிதங்களின் பட்டியலில் ஜப்பான் இடம்பெற்றது, இதில் 14 ஆசிய நாடுகள் உள்ளன. தென் கொரியா முதல் இலங்கை வரை, பல நாடுகள் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி மையங்களாக உள்ளன.

வெள்ளிக்கிழமை, கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 35 வீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். மேலும், பெரும்பாலான வர்த்தகப் பங்காளிகளுக்கு 10 வீதம் முதல் 20 வீதம் வரை மொத்த வரிகளை உயர்த்த திட்டமிட்டு இருப்பதாகவும், இவை பணவீக்கத்தை அதிகரிக்கும் என்ற கவலைகளையும் ட்ரம்ப் நிராகரித்தார்.

"மீதமுள்ள அனைத்து நாடுகளும் 15 வீதம் அல்லது 20 வீதம் வரி செலுத்த வேண்டும். அதை இப்போது முடிவு செய்வோம்," என்று அவர் என்பிசியிடம் கூறினார்.

ஆகஸ்ட் 1, 2025இற்குள் உலக நாடுகள் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். ஆனால், ஜப்பான் போன்ற நட்பு நாடு, ஒப்பந்தத்திற்கு முயன்றும் கடுமையான வரிகளை எதிர்கொள்வதால், மற்ற நாடுகள் தங்களது வாய்ப்புகள் குறித்துக் கவலைப்படலாம்.



இந்த நிலையில், ட்ரம்ப் மீண்டும் வரி விதிப்பு முறையை மாற்றியுள்ளார். அப்படியானால், இதில் வெற்றியும் தோல்வியும் யார் பக்கம் உள்ளது?

ஒரு வகையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ட்ரம்ப் குறிவைத்த அனைத்து நாடுகளும் (கிட்டத்தட்ட) காலக்கெடு நீட்டிப்பால் பயனடைகின்றன. இப்போது ஒப்பந்தங்களைச் செய்ய அவர்களுக்கு இன்னும் மூன்று வாரங்கள் உள்ளன.

"ஆகஸ்ட் 1 காலக்கெடுவுக்கு முன் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள அழுத்தம் இருப்பது நம்பிக்கை அளிக்கிறது," என யுனைடெட் ஓவர்சீஸ் வங்கியின் ஆராய்ச்சித் தலைவர் சுவான் டெக் கின் கூறினார்.

இந்த வாரம் வரி தொடர்பான கடிதங்களைப் பெற்ற தாய்லாந்து, மலேசியா போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்கள், ஒரு தீர்வைத் தேடுவதில் குறிப்பாக ஆர்வமாக இருக்கும். சீன ஏற்றுமதிகள் மூன்றாம் நாடுகள் வழியாக (டிரான்ஸ்ஷிப்ட் பொருட்கள்) அனுப்பப்படுவதை அமெரிக்கா இலக்காக வைத்திருப்பதால், அந்த நாடுகள் அமெரிக்க - சீன பதற்றங்களில் சிக்கியுள்ளன.

வர்த்தக ஒப்பந்தங்களின் சிக்கலான தன்மை காரணமாக கால நீட்டிப்பு செய்யப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் வணிக விரிவுரையாளர் அலெக்ஸ் காப்ரி, ட்ரம்பின் கோரிக்கைகள் தெளிவாக இல்லை என்றும், அவற்றைச் செயல்படுத்த நாடுகளுக்கு கூடுதல் நேரம் தேவைப்படும் என்றும் கூறினார்.

உதாரணமாக, அமெரிக்காவுடனான வியட்நாமின் வர்த்தக ஒப்பந்தத்தில், கப்பல் வழியாக அனுப்பப்படும் பொருட்களுக்கு (டிரான்ஸ்ஷிப்ட்) குறிப்பாக வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது முழுமையாகத் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கா அல்லது அனைத்து இறக்குமதிக் கூறுகளுக்குமா என்பது தெளிவாக இல்லை.

விநியோகச் சங்கிலிகளைக் கண்காணிக்க மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பம் தேவைப்படும் எனவும், "இது மூன்றாம் தரப்பினர், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தளவாட கூட்டாளிகளை உள்ளடக்கிய மெதுவான, நீண்டகால, பரிணாம வளர்ச்சியடைந்து வரும் செயல்முறையாக இருக்கும்" என்றும் அலெக்ஸ் காப்ரி கூறினார்.

உலகளாவிய வர்த்தகத்தை நஷ்டமடையச் செய்யும் வகையில், வரிகள் நீடிக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அமெரிக்கா, ஐரோப்பா, சீனாவின் உலகளாவிய வணிகங்கள் ஆபத்தில் உள்ளதாக காப்ரி கூறினார்.

இது ஏற்றுமதியாளர்கள் மட்டுமல்ல, அமெரிக்க இறக்குமதியாளர்கள் மற்றும் நுகர்வோரையும் பாதிக்கிறது. மின்னணுவியல் முதல் ஜவுளி வரை உற்பத்தியால் வளர்ந்த ஆசியாவின் பொருளாதார இலக்குகள் மீது இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.




சர்வதேச வர்த்தகம், குறிப்பாக அமெரிக்கா, சீனா இடையே, ஆழமாக இணைக்கப்பட்டு இருப்பதால், எந்த நாடு வெற்றி பெறுகிறது, எந்த நாடு தோல்வியடைகிறது என பூஜ்ஜிய-கணிப்பு செய்வது புத்திசாலித்தனமல்ல என்கிறார் அலெக்ஸ் காப்ரி.

ஆனால், சில நாடுகளுக்கு மற்றவற்றைவிட அதிக இழப்பு ஏற்படலாம். ஆசியாவில் முதலில் ஒப்பந்தம் செய்த வியட்நாம், வாஷிங்டனுக்கு எதிராகப் பலம் குறைவாக உள்ளதால், 40 வீதம் வரை வரிகளை எதிர்கொள்கிறது.

ஏற்றுமதியை நம்பிய ஏழை நாடான கம்போடியாவும், 35 வீத வரி அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஒப்பந்தத்திற்குப் பேச்சுவார்த்தை நடத்துகிறது. தென் கொரியாவும் ஜப்பானும் பணக்கார நாடுகளாக இருப்பதாலும், உலக அரசியலில் வலுவான செல்வாக்கை கொண்டிருப்பதாலும், நீண்ட காலம் தாக்குப் பிடிக்கலாம்.

இந்தியாவுக்கு இன்னும் வரிக் கடிதம் அனுப்பப்படவில்லை. ஆனால் அதற்கும் தனித்துவமான செல்வாக்கு உள்ளது. ஒப்பந்தம் உடனடியாகத் தோன்றினாலும், இந்திய விவசாயச் சந்தையை அணுகுவது, இறக்குமதி விதிகள் போன்ற முக்கியப் பிரச்னைகளால் தாமதமாகிறது.

"அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார மற்றும் ராணுவ உறவு இருந்தபோதும், ஜப்பான் மற்ற ஆசிய வர்த்தக பங்காளிகளைப் போலவே நடத்தப்படுகிறது," என பொருளாதார நிபுணர் ஜெஸ்பர் கோல் குறிப்பிட்டார்.

இது உறவை மாற்றக்கூடும், குறிப்பாக ஜப்பான் தனது பெரிய பொருளாதார இருப்புகளுடன் நீண்டகால பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

"ஜப்பான் கடினமான பேச்சுவார்த்தையாளராக உள்ளது, இது ட்ரம்பை எரிச்சலடையச் செய்திருக்கிறது என நான் நினைக்கிறன்" என்கிறார் கோல்.

அரிசிப் பற்றாக்குறையால் விலைகள் உயர்ந்திருந்தாலும், பிரதமர் இஷிபா அமெரிக்க அரிசியை வாங்க மறுத்து, உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கிறார். மேலும், ராணுவ செலவை அதிகரிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கைகளையும் அவரது அரசு நிராகரித்துள்ளது.

"ஜப்பான் நன்கு தயாராக உள்ளது," எனக் கூறுகிறார் ஜெஸ்பர் கோல்.

ஏப்ரல் 2025இல் ட்ரம்ப் வரிகளை அறிவித்த மறுநாள், ஜப்பான் பொருளாதார அவசரநிலையைப் பிரகடனம் செய்து, பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உதவ நூற்றுக்கணக்கான ஆலோசனை மையங்களை அமைத்ததாக அவர் தெரிவித்தார்.

"ஜப்பான் நம்பகமான ஒப்பந்தத்தை நாடும்," என அவர் கூறினார். ஏனெனில் ட்ரம்ப் மீண்டும் மனம் மாற மாட்டார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

ஜூலை 2025இல் ஜப்பானின் மேல் சபைத் தேர்தல் நடைபெற உள்ளதால், ஆகஸ்ட் 1-க்குள் ஒப்பந்தம் எட்டப்படுவது ஆச்சரியமாக இருக்கும் என கோல் கூறினார்.

"யாரும் மகிழ்ச்சியாக இல்லை. ஆனால் இது ஜப்பானில் பொருளாதார மந்தநிலையை உருவாக்குமா? இல்லை," என்கிறார் அவர்.

ஆசியா நீண்ட காலமாக அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான முக்கியப் போர்க்களமாக இருந்து வருகிறது. ஆனால், வரிகள் காரணமாக ட்ரம்ப் தனது நிலையை இழக்கக்கூடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஒப்பந்தங்கள் சிக்கலானவை என்பதால், காலக்கெடுவை மீண்டும் நீட்டிப்பது ட்ரம்பின் மிகைப்படுத்தப்பட்ட நகர்வாக இருக்கலாம். "அமெரிக்காவின் பேரம் பேசும் நிலை உண்மையில் குறைந்துவிட்டது, ஏனெனில் அவர்களின் கை, உண்மையில் அவர்கள் விரும்பும் அளவுக்கு வலுவாக இல்லை என்பதை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்" என்கிறார் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பொருளாதார பேராசிரியர் டேவிட் ஜாக்ஸ்.

ஒப்பந்தங்கள், பல தசாப்தங்களாக கட்டமைக்கப்பட்ட வர்த்தக உறவுகளை மாற்றியமைக்கும் வகையில் வரலாம். அதேபோல், பாரம்பரிய ராஜ்ஜீய வழிகள் மூலமாக அல்லாமல், கடிதங்களை ஆன்லைனில் வெளியிட ட்ரம்ப் தேர்வு செய்தது எதிர்விளைவை ஏற்படுத்தக்கூடும் என்று அதை "அரசியல் நாடகம்" என்று வர்ணித்த காப்ரி கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், ட்ரம்பின் கணிக்க முடியாத தன்மைக்கு மாற்றாக தனக்கு நிலையான பிம்பத்தை உருவாக்க முயலும் சீனாவுக்கு இந்தக் குழப்பம் "சிறந்த பரிசு" எனத் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்கச் சந்தையை மாற்றுவது எளிதல்ல. வியட்நாம் முதல் ஜப்பான் வரை, ஆசிய நாடுகளுடன் சீனாவுக்கு பதற்றங்கள் உள்ளன. சீனா தற்போது அமெரிக்காவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது, ஆனால் முழு ஒப்பந்தத்திற்கு ஆகஸ்ட் 13, 2025 வரை நேரம் உள்ளது.

அதனால், இந்த வர்த்தகப் போரில் யார் பக்கம் நாடுகளின் ஆதரவு யாருக்கு அதிகமாக இருக்கும் என்பதைக் கணிப்பது கடினம், ஆனால் போட்டி தொடர்கிறது.

"வர்த்தக ரீதியாக இரு தரப்பும் இரண்டாகப் பிரிய வேண்டியிருக்கும் என்பதை உணர்கிறார்கள். ஆனால், அந்த நிலையை அடைவது மிகக் கடினமானது மட்டுமல்ல, அதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் செயல்முறையாக அது இருந்துவிடலாம்" என்கிறார் பேராசிரியர் டேவிட் ஜாக்ஸ். (பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரெம்ளின் பகையாளிகளின் மர்மக் கொலைகள்:

# புட்டினை எதிர்த்தால் மரணமே முடிவு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கிரெம்ளினின் எதிரிகள் எப்படி இறக்கிறார்கள் என்பதற்கு, விஷம் ஏற்றப்பட்ட தற்கொலைகள், உயரமான ஜன்னல்களுக்கு வெளியே தள்ளி விழுத்தல், அலெக்ஸி நவல்னி மீதான 'கேஜிபி ஹார்ட் பன்ச்' மூலம் கொல்லப்படுதல் என கொலைப்பட்டியல் நீள்கிறது. இப்படி நீளும் மர்மக் கொலைகளில் அண்மையில் பதவி நீக்கமான அமைச்சரின் மர்ம மரணமும் அடங்கும்.

கடந்த வாரம் புட்டினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட ரஷ்யாவின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் ரோமன் ஸ்டாரோவைட் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார்.

புட்டினால் ஸ்டாரோவைட் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவர் மே 2024 இல் ரஷ்ய போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பு, ஸ்டாரோவோயிட் கூர்ஸ்க் பிராந்தியத்தின் ஆளுநராக மே 2024 வரை கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் பணியாற்றினார்.

ஆகஸ்ட் 2024 இல் ஒரு திடீர் தாக்குதலில் உக்ரேனிய துருப்புக்களால் இப்பகுதி ஓரளவு கைப்பற்றப்பட்டது. மாஸ்கோ சமீபத்தில்தான் உக்ரேனியப் படைகளை கூர்ஸ்க்கில் இருந்து விரட்டியடிக்க முடிந்தது.

மரணமான அமைச்சரின் உதவியாளர் அலெக்ஸி ஸ்மிர்னோவ் ஏப்ரலில் கைது செய்யப்பட்டார். உக்ரைன் எல்லையில் நிலத்தடி காப்பரண்களை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், பதவி நீக்கம் என்பது கூர்ஸ்க் நிகழ்வுகள் தொடர்பாக புடின் ஸ்டாரோவோயிட்டின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டமை என்பதை காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

கிரெம்ளினை எதிர்க்கும் அரசியல் விமர்சகர்கள், எதிர் நாட்டு உளவாளிகள் மற்றும் அரசை விமர்சிக்கும் புலனாய்வு ஊடகவிய லாளர்கள் பல்வேறு முறைகளால் கொல்லப் பட்டுள்ளனர். மாஸ்கோ வின் திட்டமிட்ட படுகொலை முயற்சிகளால் கொல்லப்பட்ட, அல்லது தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ ருக்கும் இது வரை தெரியாது.

அத்துடன் பொலோனியம் கலந்த தேநீரைக் குடிக்க கொடுப்பதன் மூலமோ அல்லது ஒரு கொடிய நரம்பு முகவரைத் தொட வைப்பதன் மூலமோ நச்சுத்தன்மை கொண்ட தாக்குதல்கள் மூலம் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ரஷ்ய எதிர்ப்பாளர்கள் மர்மமான சூழ்நிலையில் இறந்து விடுவதால் அவை வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலைகளா அல்லது தற்கொலைகளா என்பதை தீர்மானிக்க கடினமாக உள்ளது. ரஷ்யாவின் எல்லைகள் தாண்டியும் இத்தகைய கொலைகள் இதுவரை கட்டுப்படுத்தப்படவில்லை.

சோவியத் சிதைவின் பின்னர், சந்தேகத்திற்கிடமின்றி கிரெம்ளினின் உளவுக் குழுக்கள் ஐரோப்பா முழுவதும் அவர்களின் எதிரிகளுக்கு எதிராக பல தாக்குதல்களை நடத்தியுள்ளன.

2018 இல் இங்கிலாந்தில் உள்ள சிறிய நகரமான சாலிஸ்பரியில் முன்னாள் ரஷ்ய உளவுத்துறை அதிகாரி செர்ஜி ஸ்கிரிபால் மற்றும் அவரது மகள் யூலியா ஆகியோர் நரம்பு முகவர் விஷம் குடித்து பல வாரங்கள் ஆபத்தான நிலையில் இருந்தனர். ஆயினும் அவர்கள் தப்பிப் பிழைத்தனர்.

பிரிட்டன் உடனடியாக ரஷ்ய உளவுத்துறை மீது குற்றம் சாட்டியது. ஆனால் மாஸ்கோ முழுமையாக அதனை மறுத்தது. அலெக்சாண்டர் பெட்ரோவ் மற்றும் ருஸ்லான் போஷிரோவ் ஆகிய இரு ரஷ்ய பிரஜைகளை இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள சந்தேக நபர்களாக பிரித்தானிய அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். அவர்கள் இருவரும் ரஷ்ய இராணுவ உளவுத்துறையில் முக்கிய அதிகாரிகள் என்று குற்றம் சாட்டப்பட்டனர்.

2006 ஆம் ஆண்டில், ரஷ்ய உளவு அமைப்பான கேஜிபியின் பிந்தைய வாரிசு நிறுவனமான எவ்எஸ்பி இன் முன்னாள் முகவரும், ரஷ்ய அரசை எதிர்த்த அலெக்சாண்டர் லிட்விெனென்கோ லண்டனில் கதிரியக்க பொலோனியம்-210 கலந்த தேநீரைக் குடித்ததால் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். மூன்று வாரங்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.




**அண்மையில் புட்டினால் பதவி நீக்கம் செய்த அமைச்சரின் மர்ம மரணமும், அதற்கு முன்னர் புட்டினை எதிர்த்தவர்களின் மர்ம மரணங்களும் தீர்க்கப்படாத தீர்ப்புகளாகவே உள்ளன. வரலாற்று ரீதியாக சோவியத் யூனியன் சிதைவின் பின்னரும், கிரெம்ளினின் உளவுக் குழுக்கள் ஐரோப்பா முழுவதும் தங்கள் எதிரிகளுக்கு எதிராக பல தாக்குதல்களை நடத்தியுள்ளன.**










பிரிட்டிஷ் விசாரணையில், ரஷ்ய முகவர்கள் லிட்வினென்கோவைக் கொன்றதாகக் கண்டறியப்பட்டது. அநேகமாக புட்டினின் ஒப்புதலுடன் இக்கொலை நடந்ததாக அறியப்பட்டது. ஆனால் கிரெம்ளின் இக்கொலையில் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுத்தது.

புட்டினின் அரசியல் எதிரியாக மிக உயர்ந்த நிலுயில் இருந்த போரிஸ் நெம்ட்சோவ் கொலை இன்னோர் மர்மமாகும். முன்னைய ரஷ்ய அதிபர் போரிஸ் யெல்ட்சின் கீழ் துணைப் பிரதமராக இருந்தவர். புட்டினின் முன்னோடியாக இருந்த நெம்ட்சோவ் மாஸ்கோவில் பிரபலமான அரசியல்வாதியாகவும், புடினை கடுமையாக விமர்சித்தவராவார்.

2015 பிப்ரவரியில், அவர் தனது காதலியுடன் நடந்து சென்றபோது, கிரெம்ளினை ஒட்டிய பாலத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணம் நாட்டையே பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

செச்சினியாவைச் சேர்ந்த ஐந்து பேர் அவரைக் கொன்றதற்காக குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். பின்னர் துப்பாக்கிதாரிக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் நெம்ட்சோவின் கூட்டாளிகள் இது அரசாங்கத்திடம் இருந்து கொலைப் பழியை திசை மாற்றுவதற்கான முயற்சி என்று கூறினர். மேலும் பிபிசியின் பத்திரிகையாளர்கள் நடத்திய விசாரணையில் அவர் கொல்லப்படுவதற்கு முன்பு கிட்டத்தட்ட ஒரு வருடமாக எவ்எஸ்பி முகவர்களால் நிழலாக தொடரப்பட்டது கண்டறியப்பட்டது.

நோவயா ஹசியத்தா இன் மற்றொரு பத்திரிகையாளரான அன்னா பொலிட்கோவ்ஸ்கயா மரணமும் லித்வின்கோ விசாரணையுடன் தொடர்பாக இருந்தது. அக்டோபர் 7, 2006 அன்று புட்டினின் பிறந்தநாளில் அவரது மாஸ்கோ அடுக்குமாடி கட்டிடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செச்சினியாவில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கைக்காக அவர் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் செச்சினியாவைச் சேர்ந்த துப்பாக்கிதாரி, கொலையில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். மற்ற நான்கு செச்சினியர்கள் கொலையில் ஈடுபட்டதற்காக குறுகிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டில், போரிஸ் பெரெசோவ்ஸ்கி இங்கிலாந்தின் அஸ்காட்டில் உள்ள அவரது வீட்டில் இறந்து கிடந்தார் என முதலில் கூறப்பட்டது. பின்னர் வெளிப்படையாக வந்த தகவல்களின் படி, அவரது குளியலறையில் தூக்கிலிடப்பட்ட நிலையில் உடல் கண்டறியப்பட்டது.

கிரெம்ளினில் பெரெசோவ்ஸ்கி முன்னாள் அதிபர் யெலட்சினுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர். புட்டின் பதவிக்கு வருவதில் 2000இல் முக்கிய பங்கை வகித்தவர ஆவார். பின்னைய வருடங்களில் அவர் புடினின் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார்.

மேலும் 2000 களின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் அரசியல் தஞ்சம் அடைந்தார். அவரது மரணம் குறித்து விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவர் மரணத்திற்கு தற்கொலை என்பதைத் தவிர வேறு எதையும் உறுதியாக நிறுவவில்லை.

இருப்பினும், ஒரு ஜெர்மன் தடயவியல் விஞ்ஞானி - பெரெசோவ்ஸ்கியின் குடும்ப உறுப்பினர்களால் பணியமர்த்தப்பட்டு, அவர் பிரேத பரிசோதனை புகைப்படங்களை ஆய்வு செய்ததன் மூலம், ரஷ்யர் தன்னைக் கொல்லவில்லை என்று முடிவை ஏற்படுத்தச் செய்தனர்.

இதனைப்போல ரஷ்யாவிலும், வெளிநாடுகளிலும் பல விவரிக்க முடியாத மர்ம மரணங்கள் நடந்துள்ளன.

2023 ஆகஸ்டில் விமான விபத்தில் யெவ்ஜெனி பிரிகோஜின் மற்றும் அவரது வாக்னர் தனியார் இராணுவ நிறுவனத்தின் உயர்மட்ட லெப்டினென்கள் பலர் கொல் லப்பட்டனர்.

அவர் ஆயுதமேந்திய கிளர்ச்சியைத் தொடங்கிய இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அவரை முதுகில் குத்திய தேசத்துரோகி என்று முத்திரை குத்திப்பட்டார். ஆயினும் அவர் புட்டினை விமர்சிக்கவில்லை என்றாலும், பிரிகோஜின் ரஷ்ய இராணுவத் தலைமையை சாடியதுடன், உக்ரேனில் போருக்கு செல்வதற்கான நோக்கங்களை கேள்வி எழுப்பினார்.

அமெரிக்க உளவுத்துறை மதிப்பீட்டின்படி, விமானத்தில் இருந்த 10 பேரையும் கொன்ற விபத்து வேண்டுமென்றே வெடித்ததால் ஏற்பட்டது என்று அமெரிக்க மற்றும் மேற்கத்திய அதிகாரிகளின் கூற்றுப்படி கண்டறியப்பட்டது.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னியின் மரணம் மற்றும் அதன் பின்னணியில் விளாடிமிர் புட்டின் இருந்ததாகக் குற்றச்சாட்டுகள் மீண்டும் ரஷ்யா மீது உலகின் கண்டனக் கணைகள் அதீதமாக ஏவப்பட்டன.

கிரெம்ளின் படுகொலைகளின் பின்னணி பற்றிய கேள்வியை எழுப்பியுள்ள மேற்குலக ஊடகங்கள், பாரிய குற்றச்சாட்டுக்களை மாஸ்கோ மீது தெரிவித்துள்ளனர்.

மாஸ்கோவில் நவீல்னியின் மரணம் குறித்த செய்தி வெளியானபோது உலகத் தலைவர்களும், ஊடக வர்ணனையாளர்களும் உடனடியாக ரஷ்ய ஜனாதிபதியை நோக்கி விரல் நீட்டினர்.

47 வயதான அரசின் அதிருப்தியாளருக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக சிலர் கூறினர். 2020 ஆம் ஆண்டில் நவால்னியின் முந்தைய படுகொலை முயற்சி நடந்ததைப் போலவே - இந்த ஆர்டிக் சிறைக் காலனிக்குள் அவர் மீது இதயத்தில் ஒரு பாரிய குத்தினால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டது.

இவ்வாறு கிரெம்ளின் பகையாளிகளின் மர்மக் கொலைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. கே.ஜி.பியை எதிர்த்தால் மரணமே முடிவு என்று முன்பு கூறுவது போல தற்போது புட்டினை எதிர்த்தால் அவர்களின் நிலை என்னவாகும் என்பது கேள்விக்குறியே ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சி. ஐ. டி. விசாரணைக்கு அழைப்பது

# பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல்

கொழும்பு, ஜூலை 13

பாராளுமன்றத்துக்குள் கூறும் விடயங்கள் தொடர்பில் விசாரணைகளுக்காக எம்.பிக்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுவது சிறப்புரிமைகளை மீறும் செயல். அவ்வாறு செயல்பட்டு எம்.பிக்களின் உரிமைகளை இல்லாமல் செய்துவிட வேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஒழுங்கு பிரச்னை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் கூறிய விடயங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். எங்களுக்கு குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவுக்கு செல்வது தொடர்பில் எந்தப் பிரச்னையும் கிடையாது. அர்ச்சுனா எம்.பிக்கும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் பாராளுமன்றத்துக்குள் கூறிய விடயம் தொடர்பிலேயே விசாரிக்கப்பட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்னையை முன்வைப்பதற்கும் இடமளிக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புகின்றனர். எங்களின் உரிமைகளை இல்லாமல் செய்ய வேண்டாம். நீங்கள் சிறப்புரிமை பிரச்னையை முன்வைக்க இடமளித்த பின்னர் அதனை செய்யலாம்.

நாங்கள் கூறியவை தொடர்பில் 5 மணித்தியாலங்கள் விசாரணைகளை நடத்தினர். நாங்கள் எங்களுக்கு தெரிந்த முக்கிய தகவல்களை வெளியிட்டோம். அதன் பின்னர் கொள்கலன்களை விடுவித்தவர்களை அழைத்து விசாரிக்குமாறும் நாங்கள் கோரினோம் -என்றார்.

இதனைத் தொடர்ந்து ஒழுங்கு பிரச்னையை முன்வைத்து எழுந்த அர்ச்சுனா எம். பி. கூறுகையில்,

பாராளுமன்றத்துக்கு வெளியில் கூறிய கருத்து தொடர்பிலேயே விசாரணைக்கு அழைக்கப்படுவதாக கூறப்பட்டது. நான் எங்கே வெளியில் அவ்வாறு கதைத்தேன்?. பாராளுமன்றம் எங்கே போகின்றது. குற்றப்புலனாய்வுப் பிரிவில் எனது பாராளுமன்ற உரை தொடர்பிலேயே வாக்குமூலத்தை பெற்றார்கள். இது நகைச்சுவையானது- என்றார். (எ)

# ஜூலை மாதத்தின் முதல் 8 நாளில் 48, 300 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, ஜூலை 13

2025 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தின் முதல் எட்டு நாட்களில் 48, 300 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தின் முதல் ஆறு நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 10,153 ஆகும்.

இதன்படி, ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 4,860 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 3,310 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 3,181 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 2,335 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 2,153 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூலை மாதம் 08 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 1,216,344 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# நம்பிக்கையை கட்டியெழுப்புவதில்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரி ஏற்கெனவே அரசாங்கத்திடம் இருக்கிறது. அரசாங்கம் அதன் நிதிக் கொள்கை விரிவான வெளி மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதிய அலுவலர்கள் திறைசேரியின் ஒவ்வொரு பிரிவினதும் புத்தகங்களை பரிசோதனை செய்கிறார்கள், தகவல்களை சரிபார்க்கிறார்கள், இலக்குகள் தவறவிடப்படும்போது அவற்றை சரிசெய்துகொள்ளுமாறு வலியுறுத்துகிறார்கள். இத்தகைய மேற்பார்வை நாட்டை பலவீனப்படுத்தவில்லை, மாறாக நாட்டுக்கு உதவுகிறது என்று பொதுமக்கள் இப்போது நம்புகிறார்கள். முதலீடுகளைக் கவருவதற்கும் சகலருக்கும் சட்டங்கள் பிரயோகிக்கப்படுவதை வரியிறுப்பாளருக்கு உத்தரவாதப்படுத்துவதற்குமான நம்பிக்கை முத்திரையாக இது கருதப்படுகிறது.

காணாமல் போனோர் பற்றிய உண்மை உறுதிப்படுத்தப்படாத வரை போரின் 'ஆவியை' இலங்கையினால் அடங்கவைக்க முடியாது. ஆங்கில, சிங்கள ஊடகங்களினால் பெருமளவுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், வடக்கு, கிழக்கில் செம்மணி மனித புகைகுழி விவகாரம் வேதனைமிகு நினைவுகளை மீட்கிறது என்பதுடன் அன்றாட கலந்துரையாடல்களில் முக்கிய தொனிப் பொருளாகவும் இருக்கிறது. நியாயப்படுத்தக்கூடிய அக்கறைகளையும் கடந்த காலத்தில் சான்றுகளை பாதுகாப்பதற்கு தவறியமையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சான்றுகளைப் பேணிக்காப்பதற்கு சர்வதேச பங்கேற்பு குறித்து பரிசீலிக்க முடியும். மேலும், சான்றுகள் சேகரிக்கப்படுவதையும் சர்வதேச அனுபவத்தின் அடிப்படையில் விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்யப்படுவதையும் உறுதிப்படுத்த சர்வதேச நிபுணர்களைக் கொண்டுவர முடியும்.

மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதில் இருக்கும் பற்றுறுதி தொடர்பில் அவர்களின் நம்பிக்கையையும் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையையும் வென்றெடுத்ததைப் போன்று அரசாங்கம் போரில் தங்களது அன்புக்குரியவர்களை இழந்த வடக்கு, கிழக்கு மக்களின் நம்பிக்கையையும் வென்றெடுக்க முடியும். சர்வதேச ரீதியில் மதிக்கப்படுவதும் நம்பகத்தன்மை கொண்டதுமான தேசிய அடிப்படையிலான பொறுப்புக்கூறல் செயன்முறை ஒன்றை அரசாங்கத்தினால் வகுக்கமுடியும். அதன் மூலமாக, மோதல்களுக்கும் பிளவுகளுக்கும் உள்ளாகியிருக்கும் இன்றைய உலகிற்கு தேசிய நல்லிணக்கத்துக்கான ஒரு சிறந்த உதாரணமாக இலங்கை விளங்க முடியும். ●

## வீதியிலிருந்து தூக்கி வீசப்பட்டு வேலியில் சிக்கிய மோ. சைக்கிள்


மாத்தளை, ஜூலை 13

மாத்தளை - அலுவிகாரை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளானது வீதியிலிருந்து தூக்கி வீசப்பட்டு அருகிலிருந்த வேலியில் சிக்கியுள்ளது. (எ)



# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்காவதாக, மக்களின் பாதுகாப்புக்கு பொறுப்பானவர்களாக இருந்த ஜனாதிபதி சிறிசேன உட்பட பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராக 2019 ஆம் ஆண்டில் 12 அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

ஜனாதிபதி சிறிசேன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, முன்னாள் அரச புலனாய்வுச்சேவை தலைவர் நிலாந்த ஜெயவர்தன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் தேசிய புலனாய்வு தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று 2023 ஜனவரி 13 ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஐந்தாவதாக, பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் அரச புலனாய்வு சேவை இருந்ததாக கூறும் வீடியோ ஒன்றை ஒளிபரப்பியது. அதையடுத்து கிளம்பிய சர்ச்சை காரணமாக அந்த வீடியோவில் வெளியான தகவல்களை ஆராய்வதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். ஐ. இமாம் தலைமையில் மூவர் கொண்ட குழுவை நியமித்தார்.

ஆறாவதாக, பயங்கரவாத தாக்குதல்களுடன் தொடர்புடைய புலனாய்வு அம்சங்களை ஆராய்வதற்கு 2024 ஜூனில் ஜனாதிபதி விக்கிரசிங்க முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.என்.ஜே.டி. அல்விஸ் தலைமையில் குழுவொன்றை நியமித்தார். முன்னைய ஐந்து விசாரணைக் குழுக்களுமே புலனாய்வு அமைப்புக்களின் குறைபாடுகளையும் தவறுகளையும் விசாரணை செய்ததுடன் புலனாய்வுத்துறைகளின் தலைவர்கள் இழப்பீட்டை வழங்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் விக்கிரமசிங்க எதற்காக இன்னொரு விசாரணைக் குழுவை நியமித்தார் என்று அந்த நேரத்தில் கேள்வி எழுந்தது.

உள்நாட்டு விசாரணைகள் சகலவற்றையும் தவிர, ஜனாதிபதி விக்கிரமசிங்க பேர்லினில் ஜேர்மன் தொலைக்காட்சி ஒன்றுக்கு 2023 அக்டோபரில் அளித்த நேர்காணலில் ஆறு வெளிநாடுகளின் விசாரணையாளர்கள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து அறிக்கைகளை சமர்ப்பித்ததாகவும் கூறினார்.

மேலும், குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் பெரிய ஒரு சதித்திட்டம் இருந்தது என்று அன்றைய சட்டமா அதிபர் டப்புல டி.லிவேரா தெரிவித்த கருத்து தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால், அது நடைபெறவில்லை. இவ்வாறாக, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுக்களுக்கு என்று ஒரு நீண்ட வரலாறே இருக்கிறது. இவற்றில் ஜனாதிபதி சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையே மிகவும் முக்கியமானது. ஆனால், அதில் கூறப்பட்டவற்றின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்த அரசாங்கமும் முன்வரவில்லை. தாக்குதல்களின் சூத்திரதாரிகளை இன்னமும் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கமும் விசாரணைகளை நடத்தப் போவதாக அறிவிக்கிறதே தவிர முன்னைய ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கத்தயாராக இல்லை.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் ஆறாவது வருட நினைவுதினமான கடந்த ஏப்ரில் 21 ஆம் திகதியளவில் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் குறித்து சில முக்கியமான தகவல்களை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று உள்ளூராட்சி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி கூறினார். அவரது அறிவிப்பு நாட்டில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், இறுதியில் எல்லாம் புஷ்வாணமாகவே போனது. முன்னர் மறைத்துவைக்கப்பட்ட ஆவணங்கள் உட்பட முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை மேலதிக விசாரணைகளுக்காக குற்றவியல் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிவைத்திருப்பதாக அன்றைய தினம் திசநாயக்க அறிவித்தார். அந்தளவில் அந்த விவகாரம் தற்போது நிற்கிறது.

இப்போது கார்டினல் மல்கம் ரஞ்சித் முன்னிலையில் அரசாங்கம் தன்னைத்தானே விசாரணைக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி திசாநாயக்க கூறியிருக்கிறார். குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்கு தனது அரசாங்கத்துக்கும் ஓரளவு பொறுப்பு இருக்கிறது என்பதா அவரது அந்தக் கூற்றின் அர்த்தம்? சூத்திரதாரிகள் என்றைக்காவது சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை தோன்றும் என்று நம்பவது (இதுகாலவரையான நிகழ்வுப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது) கஷ்டமாக இருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகபட்ச...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த சவாலான நேரத்தில், அதன் நேர்மறையான அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி புதிய சந்தை அணுகுமுறைகளை அடையாளம் காண அரசாங்கம் மற்றும் தனியார் துறையும் இணைந்து செயற்படுவதன் அவசியம் மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கான வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் ஷனில் பெர்னாண்டோ, தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ஹசீபா அக்பரலி ஆகியோருடன் பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஒமர் உட்பட ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## நாட்டில்...

செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமசமாஜ பத்திரிகை, மக்களுக்கு உண்மையான அர சியல் சிந்தனைகளையும், சுதந்திரப்போராட்ட கொள் கைகளையும் எடுத்துச் சென்றது. மற்ற ஊடகங்கள் பயனளிக்காதபோது கூட, இது மக்களை விழிப்பூட் டியது.

1948ல் நமக்கு வெறும் பெயரயளவிலான சுதந்திரம் மட்டுமே கிடைத்தது. உண்மையான அரசியல் சுதந்திரம் 1972இல் குடியரசாக மாறிய போது மட்டுமே கிடைத்தது. இது ஒரு 24 ஆண்டுகளாக நீடித்த போராட்டம் தான்.

1972ல் குடியரசு அரசியலமைப்பை டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உருவாக்கினார். இதுவே நமக்கு முழுமையான அரசியல் சுதந்திரத்தைத் தேடிக் கொடுத்தது.

தற்போது தொழில்நுட்ப முன்னேறத்துடன் சுரண்டல் அதிகரிக்கிறது. வறுமையும் அதிகரிக்கிறது. அதனால் ஒரு ஆதிக்கமிக்க முதலாளி வர்க்கம் உருவாகிறது - என்றார். (அ)

## நெடுந்தீவு...

இடம்பெற்றுள்ளது.

நடுக் கடலில், குறித்த சுற்றுலா படகில் இருந்து வெள்ளைக் கொடி காட்டுவதனை அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகான சபரிஷ் படகு பணியாளர்கள் அவதானித்து, விரைந்து செயற்பட்டனர்.

இதனால், சேதமடைந்த படகில் இருந்த சகல சுற்றுலாப் பயணிகளையும், தமது படகுக்கு மாற்றிய ஓரிரு நிமிடங்களில் குறித்த படகு முழுமையாக நீரில் மூழ்கியது.

அதன் பின்னர் கடற்படை படகு, குறித்த இடத்திற்கு வந்து, தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகளை தங்களது படகில் ஏற்றிக்கொண்டு குறிகாட்டுவான் நோக்கி புறப்பட்டது. (அ)

## மலையக...

கிடைக்கின்றது. வீடு வழங்கப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கின்றது.

ஆனால் இந்நாட்டுக்காக 10 பரம்பரையாக உழைத்த மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் காணி உரிமை அற்றவர்களாகவே வைக்கப்பட்டுவருகின்றனர். மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசுகள் அவர்களுக்கு காணி உரிமையை வழங்கவில்லை. ஒரு கொட்டகையை அமைப்பதாக இருந்தால்கூட நிர்வாகத்திடம் அனுமதி பெறவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அவர்கள் அனுமதி வழங்காத நிலையும் நீடிக்கின்றது.

வடக்கு-கிழக்கைவிடவும் மலையகத்திலேயே காணியில்லாப் பிரச்னை, வாழ்வியல் பிரச்னை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை உள்ளிட்டவை அதிகளவு காணப்படுகின்றது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற நாளாந்த சம்பளம் போதுமானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாகூட போதாது. நியாயமான மற்றும் நிரந்தர சம்பளம் வழங்கப்படவேண்டும். அதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும் - என்றார். (அ)

## சஜித்...

தலைவர்களையே இவ்வாறு மாற்ற வேண்டும் என கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கட்சித் தலைமையிடம் இதுபோன்ற மாற்றங்களைச் செய்து, பொதுமக்களுக்கு விருப்பமான தலைமைகளை அந்தப் பதவிகளில் நியமிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக ஆறு தேர்தல்களில் ஏற்பட்ட தோல்விகளுக்கு தேர்தல் அமைப்பாளர்களை மட்டுமே குறை கூறுவது நியாயமற்றது என்று சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், கட்சியின் நிர்வாகிகள் உடனடியாக மாற்றப்படாவிட்டால், எதிர்கால தேர்தல்களில் தோல்வி தவிர்க்க முடியாதது என்று கூறியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால், பொதுத் தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெற்றிருக்க முடியும் என்றும், அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பிற அரசியல் கட்சிகளுடன் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கியிருந்தால், ஒரு பெரிய வெற்றியைப் பெற வாய்ப்பு கிடைத்திருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோட்டாபய நாட்டைக் கையளிக்கும் ஆரம்ப கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அதனை பொறுப்பேற்றிருந்தால், அவர் செய்த பணியின் மூலம் தனக்கென ஒரு பெயரைப் பெற்றிருக்க முடியும் என்றும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கைப்பற்றி தனக்கென ஒரு பெயரைப் பெற விரும்பியதால் இரண்டு மில்லியன் வாக்குகளைப் பெற்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் நாட்டைக் கைப்பற்ற அழைக்கப்பட்டபோது, கட்சியில் உள்ள சில பொருளாதார உயரடுக்குகள் அவரை இந்த நேரத்தில் பொறுப்பேற்க வேண்டாம் என்று கூறி ஊக்கப்படுத்தியதாக தொகுதி அமைப்பாளர்களும் கட்சி மூத்தவர்களும் கூறியுள்ளனர்.

கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து அதில் பணியாற்றி வரும் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை உடனடியாக மாற்ற வேண்டும் என்றும், ஆக்கபூர்வமான யோசனைகளைக் கொண்ட இளம் பிரதிநிதிகள் அந்தப் பதவிகளில் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## வாகனம்...

நயினாதீவு பகுதியைச் சேர்ந்த இவர் கோண்டாவில் பகுதியில், பணி நிமித்தம் வாடகை வீட்டில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில் நேற்று மதிய உணவுக்காக சைக்கிளில் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடு நோக்கி சென்றுகொண்டு இருந்தார். கோண்டாவில் அம்மாச்சி உணவகத்துக்கு அருகாமையில் வீதியை கடக்க முற்பட்டவேளை வீதியால் வந்த வான் அவர் மீது மோதியதில் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, இவரது இரு பிள்ளைகள் பேராதனை மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் நிலையில், இளைய மகள் அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 9 ஏ பெறுபேறுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கு...

விவகாரங்களுக்கான பணியகத்தின் சிரேஷ்ட பணியக அதிகாரியாக செயல்படுகிறார்.

அத்துடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, கஸகஸ்தான், கிர்கிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் அமெரிக்க அரசின் கொள்கை முன்னுரிமைகளை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகிறார்.

அண்மையில், எரிக் மேயர், நோர்வேயில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தற்காலிக தூதராகவும், வடமேசிடோனியாவின் ஸ்கோப்பே நகரத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தற்காலிக தூதராகவும், துணை தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, எரிக் மேயர், மத்திய ஆசியாவில் கஸகஸ்தானின் அமெரிக்கத் தூதராக செயற்பட்டு, அமெரிக்க நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், பல நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொண்டார்.

வொஷிங்டனில் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்கள் பணியகத்தில் சிறப்பு உதவியாளர் மற்றும் சிரேஷ்ட ஆலோசகராக எரிக் மேயர் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் கம்போடியாவில் தூதரகத் தலைமை அதிகாரியாகவும், இடைக்கால துணை தூதராகவும் செயல்பட்டுள்ளார். பின்லாந்திலுள்ள அமெரிக்க தூதராகவும் கடமையாற்றிய எரிக் மேயர், ஆர்ஜென்ரீனாவின் துணை தூதராகவும், பின்னர் எகிப்தின் கெய்ரோவிலுள்ள பண்பாட்டு விவகார தூதராகவும் பணியாற்றினார்.

வொஷிங்டனில், ஆர்க்டிக் கவுன்சிலின் அமெரிக்கத் தலைவராக எரிக் மேயர் இருந்தபோது கடல்சார், சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான பணியகத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு துறைக்குள் இணைவதற்கு முன்னர் எரிக் மேயர், விமானப் போக்குவரத்து துறையில் நிறுவன விற்பனை மற்றும் அரச தொடர்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

எரிக் மேயர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பெர்க்லி வளாகத்தில் அரசியல் அறிவியலில் பட்டம் பெற்றுள்ளதுடன் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ பட்டமும் பெற்றுள்ளார்.

அவருக்கு அமெரிக்க வெளியுறவு துறையிலிருந்து பல உயரிய பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. எரிக் மேயர் டெனிஷ், பிரெஞ்சு, கம்மேர், ரஷ்யன் மற்றும் ஸ்பானிஷ் ஆகிய மொழிகளை பேசக்கூடிய ஆற்றலுடையவர். (அ)

## பாராளுமன்றில்...

ஒத்திவைப்பு விவாதங்களாகவே இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பான முதல் விவாதம் 2019/05/07 அன்று இடம்பெற்றது. இந்தப் பிரேரணையை முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பிரேரணையை அன்றைய இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வழிமொழிந்தார்.

இந்த தொடக்க விவாதத்துக்குப் பின்னர், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக மேலும் 12 பாராளுமன்ற விவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இது போன்ற பல விவாதங்கள் நடத்தப்பட்ட போதிலும், ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாகச் செயற்பட்டதாகக் கூறப்படும் நபர் அல்லது நபர்கள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாலச்சந்திரன்...

வாரத்தை மாத்திரம் பொலிஸாருக்கான கால அவகாசமாக வழங்கவுள்ளதாகவும், அதற்குள் பதில் கிடைக்காவிடின் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தனுக ரணஞ்சக கஹந்தகமகே என்ற சட்டத்தரணியினால், கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி இசைப்பிரியா மற்றும் பாலசந்திரனின் மரணம் தொடர்பான முறைப்பாடு, பதில் பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலதிக நடவடிக்கைகளுக்காக, குறித்த முறைப்பாடு சட்டப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஏற்கனவே சட்டத்தரணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது, சரணடைந்தவர்கள், சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டுள்ளதாகக் குறித்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில், பிரதானமாக, இசைப்பிரியா எனப்படும் ஷோபா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இசைப்பிரியா 2009 ஆம் ஆண்டு மே மாதம் உயிருடன், நிராயுதபாணியாக, காவலில் இருந்ததாகவும், பின்னர் சந்தேகத்திற்கிடமான நிலையில் இறந்து கிடந்ததாகவும் காணொளி ஆதாரங்கள் காட்டுவதாகக் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிகளின் அடிப்படையில், அவர் பாலியல் வன்புணர்வு மற்றும் மரண தண்டனை பாணியில் கொலை செய்யப்பட்டார் என்பதற்கான தடயங்களைக் காணமுடிகிறது.

அதேநேரம், 12 வயதுடைய பாலச்சந்திரன், உயிருடன் ஆயுதமேந்திய படையினர் வசமிருந்தமையும், பின்னர் அவர் மார்பில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்து காணப்படுவதையும் காட்டும் புகைப்படங்கள் உள்ளன.

இதுபோன்ற செயல்கள் நிரூபிக்கப்பட்டால், சர்வதேசச் சட்டத்தின் கீழ், அவை போர்க்குற்றங்களாகக் கருதப்படும் எனவும், ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் ரோம் சாசனம் ஆகிய இரண்டையும் மீறுவதாக உள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கை பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்து, உண்மை மற்றும் பொறுப்புடன், நியாயத்துக்கு வழிவகுக்கும் வகையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முறைப்பாட்டாளரான, சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## சிறப்பு வரி விலக்கு கோரி அமெ. தூதுவருடன் பேச்சு!

### தேசிய விவசாயிகள் ஒன்றியம்

கொழும்பு, ஜூலை 13

தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் ஆகிய ஏற்றுமதிக்கான சிறப்பு வரி விலக்கை கோரி அமெரிக்க தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தேசிய விவசாயிகள் ஒன்றியம் இணைப்பாளர் அநுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தீர்வை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த 30 வீத வரி விதிப்பானது கடந்த காலங்களில் மிகவும் சரிந்துவந்துள்ள எங்கள் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது.

கடந்த வருடம், எங்கள் தேங்காய் சார்ந்த பொருட்களை அதிகமாக கொள்வனவு செய்த நாடு அமெரிக்காதான்.

தேங்காய் பால் மற்றும் பிற தேங்காய் சார்ந்த பொருள் கொள்வனவின் மூலம் அதிக வருமானம் ஈட்டப்பட்டது.

அடுத்ததாக, தேயிலை சார்ந்த பொருட்கள். கடந்த சில நாட்களில், இலங்கை தேயிலைக்கு அமெரிக்க சந்தையில் உலகளாவிய அளவில் சிறந்த கௌரவம் கிடைத்துள்ளது. எனவே, வரி விதிப்பனாது தேயிலை துறைக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அதேபோல், இறப்பர் ஏற்றுமதிகள் அமெரிக்காவுக்கே சென்றுள்ளன. எனவே, இந்த வரிவிதிப்பானது தேயிலை, தேங்காய் மற்றும் இறப்பர் ஆகிய துறைகளை சார்ந்த விவசாயிகளையும், ஏற்றுமதி துறையில் ஈடுபட்ட நிறுவனங்களையும் பெரிதும் பாதிக்கின்றன.

எனவே, அரசாங்கம் இதில் தலையீடு செய்து தீர்வுகளை எடுக்கவேண்டும், இது தொடர்பில் அமெரிக்க தூதுவருடன் நாங்கள் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (அ)

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சரை மலேசியாவில் சந்தித்தார் விஜித!



கொழும்பு, ஜூலை 13

மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அங்கு ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்கே லாவ்ரொவ்வை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 58 ஆவது ஆசிய நாடுகள் சங்கம் பிராந்திய கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக மலேசியா சென்ற வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அங்கு ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கே லாவ்ரொவ்வை சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை முன்னெடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கை - ரஷ்ய உறவுகள் மற்றும் சர்வதேச அரங்கில் இரு நாடுகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு குறித்து முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

தெற்காசியாவில் ரஷ்யாவின் நம்பகமான தோழனாக இலங்கை நீண்ட காலமாக இருந்து வருவதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் லாவ்ரொவ் இதன்போது தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான மற்றும் நேர்மறையான வரலாற்றுப் பின்னணியை அவர் நினைவூட்டியதுடன், எதிர்கால ஒத்துழைப்புக்கான முன்மாதிரியாக இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் உறுதி வழங்கினார்.

முக்கியமான சூழ்நிலைகளில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய நட்பு மற்றும் தொடர்ச்சியான ஆதரவுக்காக நன்றி தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், மேலும், ரஷ்யாவுடன் கொண்டிருக்கும் வரலாற்று ரீதியான நட்புகளை பாராட்டியதுடன், பல துறைகளில் ஒத்துழைப்பை மேலும் ஆழப்படுத்த இலங்கை உறுதியுடன் இருக்கிறது என்றும் உறுதியளித்தார். (அ)

# கல்வி தனியார் மயமாக்கல் உடன் நிறுத்தப்படவேண்டும்

### அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம்

கொழும்பு, ஜூலை 13

**கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சியை அரசாங்கம் நிறுத்தவேண்டும் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் மதுசான் சந்திரஜித் தெரிவித்துள்ளார்.**

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முந்தைய அரசாங்கங்களும் கல்வியைத் தனியார்மயமாக்க முயன்றன. இலவசக் கல்வியை பாதுகாப்பது எங்கள் கடமை

கொத்தலாவலையிலிருந்து தொடங்கி, நாட்டின் பல மூலைகளிலும் உள்ள அரச கட்டமைப்புகளை தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இனி எது நடந்தாலும், இந்த அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்வது உறுதி

எனவே, இந்த தனியார்மயமாக்கல் முயற்சிகளை உடனடியாக நிறுத்துங்கள்.

இல்லையெனில், மாணவர் ஒன்றியம், பெற்றோர்கள் மற்றும் மக்கள் சக்தி ஒன்றாகச் சேர்ந்தே எதிர்வினை அளிக்கும். இலவசக் கல்வி என்பது விற்பனை செய்யும் பொருளல்ல. அதனைக் காப்பதற்கான எங்கள் போராட்டம் தொடரும் - என்றார். (அ)

# பாதாள உலகக் குழுவினர்களுக்கு துப்பாக்கி சூட்டாளர் பற்றாக்குறை

கொழும்பு, ஜூலை 13

பாதாள உலகக் குழுவினருக்கு துப்பாக்கிச் சூட்டாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைய நாட்களில் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள், பாதாள உலக துப்பாக்கிச் சூடுகளை போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் நடத்துகின்றனர் என்பதை குறிக்கிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் துப்பாக்கிச் சூடுகள் இலக்கைத் தவறவிட்டு அருகில் உள்ள பிறரை கொல்லவோ அல்லது காயப்படுத்தவோ காரணமாகி விடுகின்றன.

பாதாள உலகக் குழுவுக்கு பயிற்சி பெற்ற துப்பாக்கி சுடும் வீரர்களின் பற்றாக்குறை இருப்பதை இது காட்டுகிறது என்றும் போலிஸ் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பயிற்சி பெற்ற துப்பாக்கி சுடும் வீரர்களில் பெரும்பாலானோர் தற்போது பொலிஸ் காவலில், சிறையில் அல்லது நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதால், வெளிநாடுகளில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்கள் இலக்குகளை அடைய போதைக்கு அடிமையானவர்களை துப்பாக்கி சுடும் வீரர்களாகப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக, சில துப்பாக்கிச் சூடுகள் தவறாக இடம்பெற்றுள்ளன, துப்பாக்கிகள் செயல் இழந்துள்ளன.

மேலும் ஆயுதங்களை எவ்வாறு சரியாக கையாள்வது என்பது குறித்த அறிவு இல்லாததாலும், துப்பாக்கிச் சூடு நடத்தும்போது ஏற்படும் அச்சத்தாலும் பிற அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் அல்லது சிறிய அளவிலான பணத்துக்காக இந்தத் துப்பாக்கிச் சூடுகளை நடத்தும் இந்த நபர்கள் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதை காண முடிகின்றது.

கடந்த மாதம் 24ஆம் திகதி பொரளைப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, அதனைத் தொடர்ந்து கொஸ்கமவில் உள்ள சுடுவெல்ல பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, கடந்த மாதம் 8ஆம் திகதி பொரளையில் உள்ள லெஸ்லி ரணகல மாவத்தையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, கடந்த மாதம் 11ஆம் திகதி ஹிரானில் உள்ள மாலமுல்லவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு ஆகியவை இலக்கு வைக்கப்பட்ட நபர்களை குறிவைக்கவில்லை.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அப்பாவி மக்களே காயமடைந்துள்ளனர்.

ஜனவரி 2025 முதல் தற்போது வரையிலான 7 மாத காலப் பகுதியில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் வழிகாட்டுதலின் கீழ் 61 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். இராணுவத் தளபதி இலங்கைக்கு வருகிறார்!

கொழும்பு, ஜூலை 13

பாகிஸ்தான் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கை மற்றும் இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் இலங்கை விஜயத்துக்குப் பின் பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் இந்தோனேசியாவுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இரு நாடுகளின் வருகைகளின் போதும், இரு தரப்பு நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாட்டு பணியாளர்களால் இலங்கைக்கு குவியும் டொலர்!

கொழும்பு, ஜூலை 13

வெளிநாட்டு பணியாளர்களால் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணத்தின் ஊடாக 635.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன .

இது 2024 ஆம் ஆண்டு ஜூனில் பெறப்பட்ட 519.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது, 22 சதவீத அதிகரிப்பாகும் என்று மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் கிடைத்த 641.7 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது, அனுப்பப்பட்ட தொகையானது சற்று குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## அரசின் பொய் வாக்குறுதிகளால் ஏமாற்றப்படும் பட்டதாரிகள்

### அர்ச்சுனா எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

வேலைவாய்ப்பு விடயத்தில் உள்வாரி பட்டதாரிகள் பொய் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது பாதிக்கப்பட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவர் மேலும் உரையாற்றுகையில்,

2014 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சிறப்பு சித்திகளுடன் பல்கலைக்கழகம் நுழைந்த நாங்கள் 2019 ஆம் ஆண்டு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற காரணங்களாலும் பல்வேறு அரசியல் காரணங்களாலும் முறைகேடாக வழங்கப்பட்ட அரசாங்க நியமனங்களினால் 2020 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அளவில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பினை இழந்து நிற்கின்றோம்.

இதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து சிறப்பு சித்திகள் மூலம் விசேட பொதுபட்டம் வென்ற மாணவர்களும் அதேநேரம் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலை படங்களில் இருந்து எங்களுடைய சக ஆண்டு மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் - என்று குறிப்பிட்டார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org